Registered as a News paper in Sri Lanka

விலை ரூபா: 3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM

நாதம் 01 | பிரமோதூத ஆு சித்திரை மீ 03ஆம் வ | திங்கட்கிழமை | (16 - 04 - 1990) | ஹிஜ்ரி 1410 | றம்ழான் 19 | ஓசை 57

## மட்டக்களப்பில் மரணக்கொடுப்பனவு விண்ணப்பங்களில் 56 போலியானவை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்புக் கச்சேரியில் மரணக் கொடுப்பனவுகளுக்காக விண்ணப்பித்த விண்ணப்பங்களில் 56 போலியானவை எனக் கண்டுபிடிக்கப்பட்டன. இவ்விண்ணப்பங்கள் கச்சேரி உயர் அதிகாரிகளின் பரிசீலினையின்போது கண்டுபிடிக்கப்பட்டன. மேலும் இம்மரணக் கொடுப்பனவுகளில் ஏறக்குறைய 35 விண்ணப்பங்களுக்கான கொடுப்பனவுகள் கொழும்பில் பெறப்பட்டுள்ளனவெனவும். அவற்றிலும் மோசடிகள் நிகழ்ந்திருக்கலாம் எனவும் தெரியவருகின்றது.

அதேவேளை இவ்வாறாம் 150 பேருக்கான மரணக் கொடுப்பனவுகள் காசோலைகள் கச்சேரியில் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிகின்றது.

(6 ம் பக்கம் பார்க்க)

# யாழ். மாவட்டத்தில் 485 தமிழ் பேசும் பொலிசாரே உள்ளனர்

மக்கள் தொண்டர்படை

## 500 பேரில் 400 பேர் திருப்பி ஆயுதங்களை ஒப்படைத்தனர்

(யாழ்ப்பாணம்)

யாழ் பொலிஸ் பிரிவில் சேர்க்கப்பட்ட 500 மக்கள் தொண்டர் படையினருக்கு பயிற்சி வழங்கி ஆயுதங்களும் வழங்கப்பட்டிருந்தன. இவர்களில் 400 பேர்தான் தமக்கு வழங்கப்பட்ட ஆயுதங்களைத் திரும்பவும் ஒப்படைத்துள்ளார்களாம். மிகுதி 100பேரும் ஆயுதங்களை ஒப்படைக்கவில்லை என்றும், அவர்களைப் பற்றிய விபரங்கள் தெரியவில்லை என்றும் யாழ் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளையாழ் பொலிஸ் நிலையத்தில், யாழ். பொலிஸ் அத்தியட்சகரின் கண்காணிப்

(6ஆம் பக்கம் பார்க்க)

## உரிமைகளுக்காக உயிரைக் கொடுப்போம்

(முள்ளியவளை)

எத்தனை எத்தனை துரோகிகள் எம்முன் வந்தாலும் தமிழ் ஈழ மண்ணிற்காக உயிரைக் கொடுப்போமேயன்றி எமது உரிமைகளையும், இலட்சியத்தையும் என்றும் விட்டுக் கொடுக்க மாட்டோம். இவ்வாறு நேற்று மாலை உடையார்கட்டில் வீரவேங்கை இளங்கோவின் ஓராண்டு நினைவையொட்டி, ஞாபகார்த்த பஸ் தரிப்பு நிலையத்தைத் திறந்து வைத்துப் பேசிய கைலாஸ் கூறினார்.

மங்கள விளக்கை புதுக்குடியிருப்பு பிரதேச அரசியல் பொறுப்பாளர் ஏற்றி வைத்தார். (58)

## பொலிஸ் அத்தியட்சகர் தகவல்

(யாழ்ப்பாணம்)

**யாழ்ப்பாணப் பொலிஸ் மாவட்டத்திலிருந்து சிங்களப் பொலிஸ் அனைவரையும் தெற்கே அனுப்பி விடுவதென்பது இன்றுள்ள சூழ்நிலையில் சாத்தியமாகாது. இன்று யாழ்ப்பாண மாவட்டத்தில் முந்நூற்றுப்பதினான்கு தமிழ்ப் பொலிசாரே கடமையிலுள்ளனர். நூற்றி எழுபத்திரெண்டு முஸ்லிம்களும் இங்கு பொலிஸ் சேவையிலுள்ளனர். தமிழ்பேசும் பொலிசார் என்று கணக்குப்பார்த்தால் நாநூற்றி எழுபத்ைதந்துபேர்கள்தான் உள்ளனர். ஒரு பொலிஸ் நிலையத்திற்கு குறைந்தது நூறுபேர் வீதம் பார்த்தாலும் இப்போது இயங்கும் ஆறு பொலிஸ் நிலையங்களுக்கும் அறுநூறுபேர் வேண்டும். இந்நிலையில் சிங்களப் பொலிசார் அனைவரையும் எப்படி இங்கிருந்து அனுப்பிவைக்க முடியும்?**

இவ்வாறு யாழ். மாவட்ட பொலிஸ் அதிபர் திரு தி. சே. ஜெயராஜன் நேற்று ''ஈழநாதம்'' நிருபருக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் மேலும் பதினொரு பொலிஸ் நிலையங்கள் திறக்கப்பட வேண்டும் ஒரு பொலிஸ் நிலையத்திற்குக் குறைந்தது நூறு பொலிசார் இருக்க வேண்டும், காங்கேசதுறை, யாழ்ப்பாணம் போன்ற பொலிஸ் நிலையங்களுக்கு நூற்றுக்கு மேற்பட்ட பொலிசார் கடமையாற்ற வேண்டும்'' என்று கூறிய பொலிஸ் அதிபர் ஜெயராஜ் மேலும் பின்வருமாறு தெரிவித்தார்

சிங்களப் பொலிஸார் தமிழ்ப் பகுதிகளில் கடமையாற்றுவது கஷ்டம் தான். இங்கு அவர்கள் கடமையாற்ற வேண்டிய அவசியமும் இல்லை. ஆனால் இன்றுள்ள சூழ்நிலையில் உடனடியாக அவர்களை அனுப்பிவைக்க முடியாது

## இவ்வருட முடிவிற்குள் திடீர் பொதுத்தேர்தல்?

(கொழும்பு)

எதிர்வரும் ஓகஸ்ட், டிசம்பர் மாதங்களுக்கிடையில் ஓர் திடீர்ப் பொதுத்தேர்தல் வரலாம் என கொழும்பில் பிரதான எதிர்க்கட்சி வட்டாரங்களில் இருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. இச்செய்திகளின்படி. அரசாங்கம் மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்தைப் பாராளுமன்றத்தில் பெறுவதற்காக அரசாங்கத்தின் உயர்மட்டம் தீர்மானித்ததாகச் செய்திகள் தெரிவிக்கின்றன ஆனால், ஆளும் கட்சியின் சில உயர் மட்டங்கள் இதனை எதிர்ப்பதாகவும் செய்திகள் கூறுகின்றன.

## உயிர்த்த ஞாயிறையொட்டி நள்ளிரவுப் பூசைகள்

(யாழ்ப்பாணம்)

வடக்கு - கிழக்கு மாகாணம் எங்கும் தமிழ் மக்கள் புதுவருடத்தைக் கொண்டாடிக் கொண்டிருந்த அதேவேளை கிறிஸ்தவ மக்கள், கிறிஸ்து உயிர்த்தெழுந்த உயிர்த்த ஞாயிற்றுத் திருநாளைக் கொண்டாடினர்.

உயிர்த்த ஞாயிற்றுக்கிழமைத் திருநாளையொட்டி ஆறு வருட காலத்தின் பின்னர் நள்ளிரவுப் பூசைகள் கோவில்களில் இடம்பெற்றன சிறுவர்கள், பெரியவர்கள் சாரை சாரையாக நள்ளிரவில் தேவாலயங்களுக்குச் சென்றார்கள்.

அதேவேளை புத்தாண்டை

(6 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையின் இனப்பிரச்சினை தீரும்

**- செல்லச்சாமி**

(திருச்சி)

''இலங்கை அரசாங்கத்துக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையில் நடைபெற்றுவரும் பேச்சுவார்த்தைகள் நல்ல முறையில் வெற்றிகரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இவை வெற்றிகரமாக நிறைவேறியதும் இலங்கையில் இனப்பிரச்சினை தீர்ந்துவிடும்'' என்று இலங்கை இராஜாங்க அமைச்சர் திரு. எம். எஸ். செல்லச்சாமி திருச்சியில் நிருபர்களிடம் தெரிவித்தார்.

## ஆனந்தபுரம் கிராமத்திற்கு

## இந்தியாவில் 80,000 கோடி ரூபாய் கறுப்புப்பணம்

யும், இலட்சியத்தையும் எவ்றும் விட்டுக் கொடுக்க மாட்டோம். இவ்வாறு நேற்று மாலை உடையார் மங்களை விளக்கை புதுக்குடியிருப்பு பிரதேச அரசியல் பொறுப்பாளர் ஏற்றி வைத்தார். (58)

## உயிர்த்த ஞாயிறையொட்டி நள்ளிரவுப் பூசைகள்

(யாழ்ப்பாணம்)

வடக்கு - கிழக்கு மாகாணம் எங்கும் தமிழ் மக்கள் புது வருடத்தைக் கொண்டாடிக் கொண்டிருந்த அதேவேளை கிறிஸ்தவ மக்கள், கிறிஸ்து உயிர்த்தெழுந்த உயிர்த்த ஞாயிற்றுத் திருநாளைக் கொண்டாடினர்.

உயிர்த்த ஞாயிற்றுக்கிழமைத் திருநாளையொட்டி ஆறு வருட காலத்தின் பின்னர் நள்ளிரவுப் பூசைகள் கோவில்களில் இடம்பெற்றன சிறுவர்கள், பெரியவர்கள் சாரை சாரையாக நள்ளிரவில் தேவாலயங்களுக்குச் சென்றார்கள்.

அதேவேளை புத்தாண்டை

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஆனந்தபுரம் கிராமத்திற்கு கனடிய நிறுவனம் உதவி

(சுதுமலை)

கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட ஆனந்தபுரம் என்ற கிராம மக்களுக்கு விரவில் பல வசதிகள் செய்து கொடுக்கப் படவிருக்கிறது. சகல துறைகளிலும் பின்னடைந்த இக்கிராம மக்களுக்கு, கோப்பாய் மக்கள் நலன் சங்கமும் பிரிவினர் கனடிய நாட்டு நிதி நிறுவனம் ஒன்றின் உதவியுடன் பல வசதிகளைச் செய்து கொடுக்க முன்வந்துள்ளார்கள்.

153 குடும்பங்களை உள்ளடக்கிய இக்கிராமத்தை அண்மையில் வந்து பார்வையிட்ட கனடிய நாட்டு நிதி

(6ஆம் பக்கம் பார்க்க)

## க.பொ.த. (சா) பரீட்சையில் சித்தி எய்தாதார்க்கும் ஆசிரியநியமனம்

(கொழும்பு)

கல்விப் பொதுத் தராதர (சா) பரீட்சையில் கணிதபாடத்தில் சித்தியடையாமல் ஆங்கிலம், நடனம், சங்கீதம், கைவினை, தொழில் நுட்பப் பாடங்கள் ஏதாவதொன்றில் அதிவிசேட சித்தியடைந்தவர்களுக்கு ஆசிரியநியமனம் வழங்கப்படவுள்ளது. ஏற்கனவே நடைமுறையில் இருந்துவரும் பிரமாணப்படி மற்றப்பாடங்களுடன் கணித பாடத்தில் சித்தியடைந்தவர்களே க.பொ.த. (சா) பரீட்சையில் சித்தியடைந்தவர்களாகக் கருதப்பட்டனர்.

க.பொ.த (சா) பரீட்சையில் பூரண சித்தியடையாமல்

(6ஆம் பக்கம் பார்க்க)

## பருத்தித்துறை தபால் நிலையம் சொந்தக் கட்டிடத்தில்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை தபால் நிலையம் மீண்டும் வெகுவிரைவில் தபால் நிலையச் சொந்தக் கட்டிடத்தில் இயங்கவுள்ளது பருத்தித்துறை தபால் நிலையம் இராணுவ முகாமிற்குள் அகப்பட்டிருந்தது இராணுவ முகாம் மூடப்பட்டதும் தபால் நிலையக் கட்டிடத்தை ஸ்ரீலங்கா பொலிசார் ஆக்கிரமித்துக் கொண்டனர், தற்போது பருத்தித்துறையில் இடம்பெற்ற சம்பவங்களையடுத்து ஸ்ரீ லங்கா

(6ஆம் பக்கம் பார்க்க)

## ஒஸ்மானியாக் கல்லூரியில் மீண்டும் ஆரம்பப்பிரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ஒஸ்மானியாக் கல்லூரியில் மீண்டும் ஆரம்பப் பிரிவை ஆரம்பிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது

ஒஸ்மானியாக் கல்லூரியில் கடந்த காலங்களில் ஆரம்பப் பிரிவு மூடப்பட்டிருந்தது. இப்பிரிவை மீண்டும் திறக்கக்கோரி ஒஸ்மானியாக் கல்லூரி பெற்றார் ஆசிரியர் சங்கமும், கல்லூரி அபிவிருத்திக் குழுவும் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியிடம் முறையிட்டிருந்தனர்.

இக்கோரிக்கையைக் கல்வித்திணைக்களத்துடன் கலந்

(6ஆம் பக்கம் பார்க்க)

பத்திரெண்டு முஸ்லிம்களும் இங்கு பொலிஸ் சேவையிலுள்ளனர். தமிழ்பேசும் பொலிசார் என்று கணக்குப்பார்த்தால் நாநூற்றி எழுபத்னதந்துபேர்கள்தான் உள்ளனர். ஒரு பொலிஸ் நிலையத்திற்கு குறைந்தது நூறுபேர் வீதம் பார்த்தாலும் இப்போது இயங்கும் ஆறு பொலிஸ் நிலையங்களுக்கும் அறுநூறுபேர் வேண்டும். இந்நிலையில் சிங்களப் பொலிசார் அனைவரையும் எப்படி இங்கிருந்து அனுப்பிவைக்க முடியும்?

இவ்வாறு யாழ். மாவட்ட பொலிஸ் அதிபர் திரு தி. சே. ஜெயராஜன் நேற்று "ஈழநாதம்" நிருபருக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்

யாழ்ப்பாண மாவட்டத்தில் மேலும் பதினொரு பொலிஸ் நிலையங்கள் திறக்கப்பட வேண்டும் ஒரு பொலிஸ் நிலையத்திற்குக் குறைந்தது நூறு பொலிசார் இருக்க வேண்டும், காங்கேசதுறை, யாழ்ப்பாணம் போன்ற பொலிஸ் நிலையங்களுக்கு நூற்றுக்கு மேற்பட்ட பொலிசார் கடமையாற்ற வேண்டும்" என்று கூறிய பொலிஸ் அதிபர் ஜெயராஜ் மேலும் பின்வருமாறு தெரிவித்தார்

சிங்களப் பொலிஸார் தமிழ்ப் பகுதிகளில் கடமையாற்றுவது கஷ்டம் தான். இங்கு அவர்கள் கடமையாற வேண்டிய அவசியமும் இல்லை. ஆனால் இன்றுள சூழ்நிலையில் உடனடியாக அவர்களை அனுப்பிவைக்க முடியாது

# ராஜீவ்காந்தி நடித்துக் காட்டியதை அன்னை பூபதிநடத்திக்காட்டினார்

(யாழ்ப்பாணம்)

எமது தமிழீழ இந்திய யுத்தம் தொடங்கியபோது இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி சொன்னார்-"ஆப்டர்" ஒல் ரூத் வுசன்ட்போய்ஸ் "இவர்களைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவது என்ன பெரிய காரியமா? என்றார். ஆனால் நாமோ இரண்டாயிரம் இந்திய இராணுவத்தை கொன்று தான் அவர்களை திருப்பி, துரத்தியடித்திருக்கிறோம்.

ஆகவே ஒரு கணத்தில் அடக்கிவிடலாம் என்று எண்ணிக் கொண்டிருந்த ராஜீவ்காந்தியின் முகத்தில் எமது தமிழீழ மக்கள் கரியைப்பூசிவிட்டனர்

என்று நேற்று சாவகச்சேரியில் பெருந்திரளான மக்கள் மத்தியில் யாழ். மாவட்ட அரசியல் இணைப்பாளர் ஸ்ரான்லி டொமினிக் பேசும் போது குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் குறிப்பிடுகையில் இந்திய விடுதலைப் போராட்ட காலங்களில் நடந்த உப்புச் சத்தியாக்கிரகம், கண்டி யாத்திரையை ராஜீவ் காந்தியவர்கள் இன்றைய மக்களுக்கு காட்டுவதற்காக நடித்து காட்டுகிறார். மகாத்மா காந்தியில்லாத வேளையில் மகாத்மா காந்திபோல் வேடம் தரித்து மக்களுக்கு ஞாபகப் படுத்தினார்.

ஆனால் அன்னை பூபதியோ ராஜீவ்காந்தி அவர்களுக்கு அந்த சத்தியாக்கிரக போராட்டத்தை நடத்திக் காட்டியுள்ளார் என்றும் குறிப்பிட்டார்.

- டொமினிக்

இதே கூட்டத்தில் தென்மராட்சி தமிழீழ விடுதலைப் புலிகளின் பொறுப்பாளர் தினேஸ் பேசும் பொழுது - கடந்த இரண்டரை வருடங்களின் பின் முதன் முதலாக வருடத்தின் முதல் நாள், புத்தாண்டு தினமாகிய இன்று ஓர் எழுச்சி நாளாக கொண்டாடியது எம்மை உற்சாகப்

(6ஆம் பக்கம் பார்க்க)

## இளம் குடும்பப் பெண் தற்கொலை

(யாழ்ப்பாணம்)

குடும்பத்தகராறு காரணமாக கணவனைப் பிரிந்து வாழ்ந்து வந்த வசந்தாதேவி மகாலிங்கம்என்பவர் வயது 22 நச்சுத்திராவகம் அருந்தி தற்கொலை செய்து கொண்டார்.

கைதடி நாவற்குளியைச் சேர்ந்த இவர் நேற்று முன்தினம் இரவு தற்கொலை செய்து கொண்டார். கடந்த இரண்டுவருடங்களாக கணவனைப் பிரிந்து வாழ்ந்தஇவர் திடீரென தற்கொலை செய்து கொண்டதாக இவரது தந்தையார் மரணவிசாரணையின் போது தெரிவித்துள்ளார். (லோ)

## ஆய்வு நிதியில்லாமல் இயங்கும் ஆய்வு நிறுவனம்

(கொழும்பு)

எனக்குத் தெரிந்தமட்டில் ஆய்வுக்கென நிதியில்லாமல் இயங்கும் ஒரே ஒரு ஆய்வு நிறுவனம் எம்.ஆர் ஐ. (மருத்துவ ஆய்வு நிறுவனம்) என்று செவ்வாயன்று எம். ஆர் ஐயின புதிய கட்டிடத் தொடரைத் திறந்து வைத்துப்பேசிய அதன் பணிப்பாளர்டாக்டர் திஸ்ஸா விதாரண தெரிவித்தார்.

ஆய்வுக்குப் பயன்படுத்துவதற்கு உள்நாட்டுப் பணமோ அந்நியச் செலாவணியோ கிடையாதென்றும், திறமையான மருத்துவர்களையும். விஞ்ஞானிகளையும் வேலைக்கமர்த்துவதற்கும், உபகரணங்களைப் பெற்றுக் கொள்வதற்கும் கூடப் பணவசதியில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கொழும்பில் வாழ்க்கைச் செலவு அதிகம் என்றும் குறைந்த சம்பளத்தை வழங்குவதனால்தான் திறமையான சேவையைப் பெறுவதில் தோல்வி கண்டுள்ளதாகவும் எம். ஆர். ஐபில் வசதிகள் இருந்தும், நிதி ஒதுக்கீடும் ஊக்குவிப்பும் இல்லாது போனால் எதிர்காலத்தினை முன்னேற்றுவது கஷ்டம் என்றார்.

ரூபா 1 கோடியே 400 இலட்சம் பெறுமதியான உபகரணங்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## மகேந்திரராசா நாளை திருமலை செல்கிறார்

(திருக்கோணமலை)

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் திரு. கோ. மகேந்திரராசா (மாத்தயா) நாளைபதினேழாந்தேதி செவ்வாய்க்கிழமை திருக்கோணமலைக்கு வருகை தருகிறார்.

இலங்கையிலிருந்து இந்திய ராணுவம் கடந்தமாதம் இருபத்திநான்காம்தேதி முற்றாக வெளியேறிச் சென்றபின் திரு. மகேந்திரராசா நாளைதான் முதல் தடவையாகத் திருக்கோணமலைக்கு விஜயம் செய்கிறார்.

திருக்கோணமலையில் பொதுமக்களையும் மக்கள் முன்னணி அமைப்பாளர்களை

(6ஆம் பக்கம் பார்க்க)

இச்செய்திகளின்படி. அரசாங்கம் மூன்றில் இரண்டு பெரும் பதாகவும் செய்திகள் கூறுகின்றன.

## இலங்கையின் இனப்பிரச்சினை தீரும்

(திருச்சி)

"இலங்கை அரசாங்கத்துக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையில் நடைபெற்று வரும் பேச்சுவார்த்தைகள் நல்ல முறையில் வெற்றிகரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இவை வெற்றிகரமாக நிறைவேறியதும் இலங்கையில் இனப்பிரச்சினை தீர்ந்துவிடும்" என்று இலங்கை இராஜாங்க அமைச்சர் திரு. எம். எஸ். செல்லச்சாமி திருச்சியில் நிருபர்களிடம் தெரிவித்தார்.

- செல்லச்சாமி

## இந்தியாவில் 80,000 கோடி ரூபாய் கறுப்புப்பணம்

(டில்கி)

இந்தியாவில் கணக்கில் வராமல் ரூபா 80,000 கோடிக்கு அதிகமாகக் கறுப்புப் பணம் இருப்பதாக அரசாங்க மதிப்பீடு கூறுகின்றது. இந்திய அரசு வெளிநாடுகளிலிருந்தும் உலகநிதி ஸ்தாபனங்களிலிருந்தும் வாங்கியிருக்கிறமொத்தக் கடன் தொகையும் சுமார் ரூபா 80,000 கோடிதான்.

நவம்பரில் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பிறகு கறுப்புப்பண நடவடிக்கைகள் குறைந்திருப்பதாகமதிப்பிடப்பட்டுள்ளது.

கரடியனாறு

## விவசாய பயிற்சிப் பாடசாலை புனரமைக்க மகாநாடு

(மட்டக்களப்பு)

கரடியனாறு விவசாயப் பயிற்சிப் பாடசாலையைப் புனரமைப்பதற்கான ஓர் மகாநாடு நாளை நடைபெறவுள்ளது.

இம் மகாநாட்டில் மட்டக்களப்புஅரச அதிபர், மாகாண சபை பதில் விவசாயச் செயலாளர், யூன் என். டி பி. பொருளாதார ஆலோசகர், மட்டக்களப்பு பல்கலைக்கழக விவசாய பீட விரிவுரையாளர் ஆகியோர் கலந்துகொள்கின்றனர்.

இம்மகாநாட்டில் கரடியனாறு விவசாயப்பயிற்சிப் பாடசாலை புனரமைப்பு சம்பந்தமாக முக்கிய முடிவுகள் எடுக்கப் படவுள்ளதாகவும் தெரிகின்றது.

தமிழ் நாட்டில்

## பிரிவினையைத் தூண்டுவதாக கருணாநிதி மீது குற்றச்சாட்டு

(சென்னை)

தமிழகத்தில் பிரிவினைவாதச் சக்திகளை தூண்டிவிடுவதாகவும், விடுதலைப்புலிகள் தமிழகத்தில் தங்குதடையின்றி நடமாடுவதற்கு முதல்வர் காரணமாக இருக்கின்றார்கள் என்று தமிழ்நாட்டு இந்திரா காங்கிரஸ் கட்சித்தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி சேலத்தில் நடந்த இந்திரா காங்கிரஸ் தொண்டர்கள் மத்தியில் பேசும் போது தெரிவித்தார்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## காணித்தகராறால் வயோதிபர் மரணம்

(யாழ்ப்பாணம்)

கடந்த மாதம் இருபத்திமூன்றாம் திகதியில் காணித்தகராறு காரணமாக ஏற்பட்ட கைகலப்பில் காயமடைந்த வீ. சதாசிவம் (வயது

(6ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

சீயாக்காய், பயறு, அரிசி, வெந்தயம் ஆகிய நான்கு வகைப் பொருட்கள் அடங்கிய சீயாக்காய் பவுடர் எங்களிடம் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

M. G. M NO. 777
K. K. S. ROAD, JAFFNA.
(B/746)

(நியூவீனஸ்) யாழ். நகரில் சிறந்த வீடியோ, ஓடியோ றெக்கோடிங்கிற்கும், ரி. வி. அன்ரனா இணைப்பிற்கும் மற்றும் சகலவிதமான ரி. வி. டெக், றேடியோக்கள், மணிக்கூடுகள், எலக்றோனிக் சாதனங்கள் உத்தரவாதத்துடன் திருத்திக்கொள்ள நாடவேண்டிய இடம்: NEW VENUS No: 60 Stanley Road, Jaffna.
B/538

### வேலையாட்கள் தேவை

சைனீஸ் றெஸ்ரூறன்ஸ்சுக்கு நன்றாக சமையல் செய்யக் கூடியவர்களும், பரிமாறுவோர்களும்தேவை. சம்பளம் பேசித் தீர்க்கப்படும். கடிதமூலம் தொடர்பு கொள்ளவும்.
S. கண்ணன் 83, இராமநாதன் வீதி, கலட்டி, யாழ்ப்பாணம்.
B / 776

### சேவை

வீடியோ கிளப்பில் பணி புரிய பெண் பிள்ளைகள் தேவை. சம்பளம் பேசித் தீர்க்கப்படும். கடிதமூலம் தொடர்பு கொள்ளவும்.
S. கண்ணன் 83, இராமநாதன் வீதி, கலட்டி, யாழ்ப்பாணம்.
B / 777

### நெசவாளர் தேவை

மின்தறி நெசவில் குறைந்தது 2 வருட அனுபவம் உள்ள நெசவாளர் உடன் தேவை நேரில் வரவும் யூனியன் பவலூம் 190ம்- கட்டையடி, நுணாவில் சாவகச்சேரி

## படகுச் சேவை மீண்டும் ஆரம்பம்

(நெடுந்தீவு)

தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்த இருநேரப் படகுச் சேவையை மீண்டும் தொடங்கப் பெருந்தெருக்கள் அதிகாரசபை தீர்மானித்துள்ளது. 16 ஆந் திகதி தொடக்கம் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ள புதிய இயந்திரப்படகான ''வலம்புரி'' ஒருநேர சேவையையும், அடுத்த சேவையைக் குமுதினிப் படகும் மேற்கொள்ளும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதன் மூலம் நெடுந்தீவுப் பிரயாணிகளின் போக்குவரத்து வசதிகள் சீர்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. முன்னர் இருந்ததைப் போன்று மூன்று தடவை போக்குவரத்துச் செய்ய ஏற்றதான ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுவதை பிரயாணிகள் பெரிதும் விரும்புகின்றனர்.

## வவுனியாவில் வரட்சி நிவாரணம்

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் வரட்சியால் பாதிப்படைந்த குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்கும் வேலைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

இந்த நிவாரணத்திட்டத்தின் கீழ் இருபத்தாறாயிரத்திற்குமதிகமான குடும்பங்கள் நன்மை பெற இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

75 வீதம் பாதிப்படைந்தவர்களின் தொகை அதிகம் என்று இவர்களுக்கு நிவாரணம் வழங்கும் வேலைகள் விரைவாக நடைபெற்று வருவதாகவும் கூறப்பட்டது.

## வினாயகர் திருவிழா

(முல்லைத்தீவு)

குமிளமுனை கொட்டுக்கிணற்று வினாயகர் ஆலயப் புதுவருடத் திருவிழா நேற்று முன்தினம் விசேட அபிசேக ஆராதனையுடன் நடைபெற்றது.

இரவு நிகழ்ச்சியாகப் பக்திப் பிரசங்கத்துடன் வில்லிசைக் கச்சேரியும் இடம் பெற்றது.
(58)

## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

மலர்வு 20 | 09 | 1909



உதிர்வு 18 | 03 | 1909

அமரர்
### திருமதி லட்சுமி அம்மாள் நாராயணசாமி

எங்கள் அருமைத் தாயே! எங்களை அன்புடனும், நேர்மையுடனும், பாசத்துடனும் நல்வழிகாட்டி வளர்த்து கண்ணை இமைகாப்பதுபோல் காத்த உங்கள் புன்னகை தவழும் இன்முகத்தை மறப்போமோ!


அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்ச்சி 17. 04. 90 செவ்வாய்க்கிழமை பகல் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும் வண்ணம் பணிவன்புடன் கேட்டுக் கொள்வதுடன் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் ஈமக் கிரியைகளில் கலந்து ஆறுதல் கூறி தேற்றியவர்களுக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும் மற்றும் பல்வேறு வகைகளில் உதவிகள் புரிந்தவர்களுக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

22, ஸ்ரீ வெங்கடேசன் வீதி,
யாழ்ப்பாணம்.

மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்
(B-771)

## காணவில்லை



### அமரசிங்கம் குகதாசன்

யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி 177/3 ஐச் சேர்ந்த அமரசிங்கம் குகதாசன் என்பவர் 02. 04 90 இல் இருந்து காணாமல் போய்விட்டார். பதின்மூன்று வயது நிரம்பிய இச்சிறுவன் காணாமல் போன அன்று பச்சைக் கோட்டுச் சறமும் வெள்ளைச் சேட்டும் அணிந்திருந்தார். மிக மெல்லிய தோற்றமும் மாநிறமும் உடைய இச்சிறுவனை கண்டவர்கள் மேற்படி விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும்

கண்டு பிடித்து தருபவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
அருணா ஜுவலறி
177/3 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(R/ 131)

## யாழ்நகரில் இன்றைய சினிமா

**வின்சர் - யாழ்**
தினசரி 4-00, 6-45, 9-45
சனி ஞாயிறு விடுமுறைநாட்களில்
10·30, 2.30, 6 30
பாக்கியராஜ் சோனா
**இது நம்ம ஆளு**
(புதிய வெளியீடு)

106வது நாளாக!!
**நியூ சாந்தி (யாழ்)**
தினசரி 10.30, 2.30, 6.30
சூப்பர் ஸ்ரார்
ரஜனி - அமலா நடித்த
**கொடி பறக்குது**
(கலர்)

7 வது வாரம்
**மனோகரா - (யாழ்)**
தினசரி 10.30, 2.30, 6.30
ரஜனி, ரூபினி. நடித்த
**மனிதன்**
(கலர்)

**ராஜா (யாழ்)**
10. 30, 2. 30, 6. 30
ரஜனி (இரு வேடம்)
ராதா, நதியா
105 நாள் வெற்றிநடை போடுகிறது
**ராஜாதி ராஜா**
(கலர்)

## ஸ்ரான்லி கல்லூரிக்கு ஒரு லட்சம் உதவி

(அரியாலை)

வடகிழக்கு மாகாணசபை கல்வி அமைச்சின் செயலாளர் சி. ஜே. சற்குணராஜா தமது யாழ்மாவட்ட விஜயத்தின போது யாழ். கனகரத்தின மகாவித்தியாலயத்திற்கும் வருகை தந்திருந்தார்.

அப்போது அங்கு கல்விபயலும் மாணவர்களின் குடிதண்ணீர் தேவையை நிறைவு செய்யும் பொருட்டு ஒரு நவீன நீர் இறைக்கும் இயந்திரம் கொள்வனவு செய்து வழங்கவேண்டுமென்று, யாழ்மாவட்ட கல்விப் பணிப்பாளர் ஆர். சுந்த

## வேலை வாய்ப்பு

யாழ். மாவட்ட தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனைக் கூட்டுறவுச் சங்கங்களின் மேற்பார்வையாள



தியாகச் சுடர் பூபதியே
பெண் இனத்தின் எழுச்சி வடிவமே
ஈழமாதா பெற்றெடுத்த பெருந்தகையே
தமிழ் ஈழம் உள்ளவரை என்றென்றும்
நிலைக்கும் உமது புகழ்.

**அன்னை பூபதிக்கு தீவக மக்கள் சார்பாக எங்களது அஞ்சலிகள்!**

சுந்தரமூர்த்தி ஸ்ரோர்ஸ்
வங்களாவடி, வேலணை.
[illegible] ஸ்ரோர்ஸ்

விடியலைந் தேடி நின்ற
வீரத் தாய் பூபதிக்கு
## எங்கள் அஞ்சலிகள்



வீ. எம். கே. தங்க மாளிகை

தேவை. சம்பளம் பேசித் தீர்க்கப்படும். கடிதமூலம் தொடர்பு கொள்ளவும்.

S. கண்ணன் 83, இராமநாதன் வீதி, கலட்டி, யாழ்ப்பாணம்.

B / 777

### நெசவாளர் தேவை

மின்தறி நெசவில் குறைந்தது 2 வருட அனுபவம் உள்ள நெசவாளர் உடன் தேவை நேரில் வரவும் யூனியன் பவுலூம் 190ம்- கட்டையடி, நுணாவில் சாவகச்சேரி

## விநாயகர் திருவிழா

(முல்லைத்தீவு)

குமிளமுனை கொட்டுக்கிணற்று விநாயகர் ஆலயப் புதுவருடத் திருவிழா நேற்று முன்தினம் விசேட அபிசேக ஆராதனையுடன் நடைபெற்றது.

இரவு நிகழ்ச்சியாகப் பக்திப பிரசலங்தன் வில்லிசைக் கச்சேரியும் இடம் பெற்றது.

(58



தியாகச் சுடர் பூபதியே
பெண் இனத்தின் எழுச்சி வடிவமே
ஈழமாதா பெற்றெடுத்த பெருந்தகையே
தமிழ் ஈழம் உள்ளவரை என்றென்றும்
நிலைக்கும் உமது புகழ்.

**அன்னை பூபதிக்கு தீவக மக்கள் சார்பாக எங்களது அஞ்சலிகள்!**

**சுந்தரமூர்த்தி ஸ்ரோர்ஸ்**
வங்களாவடி, வேலணை.

**துரைராசா ஸ்ரோர்ஸ்**
வங்களாவடி, வேலணை.

**கபிலன் ரெக்ஸ்ரைல்ஸ்**
வங்களாவடி, வேலணை.

(R/175)

விடியலைத் தேடி நின்ற
வீரத் தாய் பூபதிக்கு

## எங்கள் அஞ்சலிகள்



## வீ. எம். கே. தங்க மாளிகை

தங்க, வைர நகை வியாபாரம்

**கண்டி வீதி, சாவகச்சேரி**

தொலை பேசி: 288

(B/528)

### ஸ்ரான்லி கல்லூரிக்கு ஒரு லட்சம் உதவி

(அரியாலை)

வடகிழக்கு மாகாணசபை கல்வி அமைச்சின் செயலாளர் சி. ஜே. சற்குணராஜா தமது யாழ்மாவட்ட விஜயத்தின போது யாழ். கனகரத்தின மகாவித்தியாலயத்திற்கும் வருகை தந்திருந்தார்.

அப்போது அங்கு கல்விபயலும் மாணவர்களின் குடிதண்ணீர் தேவையை நிறைவு செய்யும் பொருட்டு ஒரு நவீன நீர் இறைக்கும் இயந்திரம் கொள்வனவு செய்து வழங்கவேண்டுமென்று, யாழ்மாவட்ட கல்விப் பணிப்பாளர் ஆர். சுந்தரலிங்கம் செய்த சிபார்சை ஏற்றுக் கொண்டு, உடனடியாக இயந்திரம் வாங்குவதற்கு ஒரு லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்து கொடுத்துள்ளார்.

(11)

## வேலை வாய்ப்பு

யாழ். மாவட்ட தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனைக் கூட்டுறவுச் சங்கங்களின் மேற்பார்வையாளருக்கான விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றது. உரிய சம்பளம் வழங்கப்படும். கல்வித்தகைமையுடன் (20.4.90) வெள்ளிக்கிழமைக்கு முன்னதாக விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி, யாழ். மாவட்டம், கோண்டாவில்எனும் விலாசத்துக்கு மாதிரி விண்ணப்படிவரீதியாக விண்ணப்பிக்கவும்.

அமைப்பாளர்
வி.பு.ம.முன்னணி
(R-769)

தமிழீழத்தின் விடிவிளக்கு

அன்னை பூபதி கணபதிப்பிள்ளைக்கு

## எங்கள் அஞ்சலிகள்



விடுதலையென்கின்ற
விடியலை மறைத்திட
விரைந்து வந்த கொடியவர்கள்
சுடுகலன் கொண்டு – எம்
சுதந்திர வீரரை அழிப்போமென்று
படுகொலை புரிந்திட்ட
பண்பற்ற செயலைக் கண்டெழுந்து,
துடிப்புடன் அகிம்சைப்
போர்தனைத் தொடுத்த தூயவளே
இதயத்தில் இருத்தி
அஞ்சலி செலுத்திறோம்
ஏற்றிடம்மா.

கணபதிபடிப்பகம்
கணபதிமின் அமைப்பாளர்கள்
நெடியகாடு விளையாட்டுக்கழகம்
நெடியகாடு
வல்வெட்டித்துறை.
(R/183)




அன்னை
**பூபதியே**
அணிதிரள்வோம்
உன்வழியில்

தமிழீழம் காணவென
உயிர் கொடுத்தாய்!
கொடுத்தாய் உ னுயிரை
தமிழீழம் காணவேதான்
பாதைகள் பலவானாலும்
நோக்கமோ ஒன்றேதான்
திலீபனின் வழிசென்று
தியாகத்தில் உச்சமானாய்
உல்.வழி தொடர்ந்தோம்!
நாம் இன்னுயிர் நீர்த்தவுன்
பொன்னடி தொடர்வோம் காண்
முடிவது காணுமட்டும்
ஓய்ந்திடமாட்டோம் அம்மா!
உணவொழித்து உயிர்நீத்தாய்
அணிதிரள்வோம் உன்வழியில்.

(B/172)

— கொடிகாமம் வர்த்தகர் சங்கம்

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேஷ்டி அழைப்பும்



### திரு. ஆறுமுகம் கந்தையா

(இளைப்பாறிய அதிபர்)

தோற்றம்: **31 - 8 - 1923**

மறைவு: **19 - 3 - 1990**

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய் திகழ்ந்து, அன்பு, அறிவு, பண்பு, பாசம், நேர்மை என்பவற்றை வளர்த்து, நல்வழிகாட்டி எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி விட்டு, இறைவனடி சேர்ந்த எங்கள் அன்புத் தெய்வமே, உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

அன்னாரின் அந்தியேஷ்டி வைபவம் எதிர்வரும் 18-4-90 புதன்கிழமை அன்று எமது இல்லத்தில் நடைபெற இருப்பதால், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வரணி வடக்கு,
வரணி
(R-185)

அன்பு அகலாத,
மனைவி, மகள், மருமகனும்
அன்புச் சகோதரர்களும்

# ஈராக்கிற்கு கடத்தப்படவிருந்த நவீன ஆயுதங்கள் கண்டுபிடிப்பு

(லண்டன்)

இங்கிலாந்து சுங்கப் பிரிவினர் இரசாயன நச்சுக் குண்டுகளையும், அணு ஷெல்களையும் ஏவக்கூடிய துப்பாக்கிகளை சுங்கப் பரிசோதனையின்போது கண்டுபிடித்துள்ளனர். 'உலகை அழிக்கும் துப்பாக்கிகள்' என்று வர்ணிக்கப்படும் இந்தப் பாரிய குழாய் வடிவில் அமைந்த துப்பாக்கிகள், எண்ணெய்க் குழாய்கள் என்று உறுதி கூறப்பட்டு ஈராக் நாட்டிற்கு கப்பலில் அனுப்ப தயார் நிலையில் இருந்தனவாம்,

மிலில்ஸ்பறோவில் கப்பல் பழுது பார்க்கும் துறையில் 40 மீற்றர் (130 அடி) நீளம் உள்ள குழாய்கள் எட்டுப் பெட்டிகளில் பொதியாக்கப்பட்டு இருந்ததை சுங்கப் பகுதியினர் பரிசோதனையின் போது சென்ற செவ்வாயன்று கண்டுபிடித்தனர்.

40 மீற்றர் நீளமுள்ள துப்பாக்கி குழாய்கள் இவை என்பதில் சந்தேகமில்லை என்று சுங்கப் பகுதிப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

ஈராக் மரற்ரயிம் நிறுவனத்தினால் வாடகைக்கு அமர்த்தப்பட்ட, ஆனால் பேர்முடா வில் பதிவு செய்யப்பட்ட கப்பலில் ஏற்றுவதற்காக இப்பொதிகள் வைக்கப்பட்டிருந்தன சில தினங்களில் இக் கப்பல் பிரயாணத்தை மேற்கொள்ளவிருந்தது.

உருக்கினால் வார்க்கப்பட்ட இப்பாரிய குழாய்கள் பெற்றோல் இரசாயனத் தொழிற்சாலை ஒன்றுக்கு இறக்குமதி செய்யப்படவிருந்ததாகவும், இங்கிலாந்து சுங்க அதிகாரிகள் இது தொடர்பாக வெளியிட்ட கருத்து 'ஆதாரமற்ற பொய்' என ஈராக் சிரேஷ்ட அதிகாரி ஒருவரை மேற்கோள் காட்டி ஈராக் செய்தி ஸ்தாபனமான ஐ. என். ஏ. லண்டனில் மறுப்புத் தெரிவித்துள்ளது.

பொதிகளில் ஈராக கனிப்பொருள்கள் அமைச்சு, ஈராக் குடியரசு என்று விலாசமிட்டிருந்ததாக கப்பல் பழுது பார்க்கும் துறை தொழிலாளர் தெரிவித்தனர்.

வெடிகுண்டு நிபுணர்கள் சம்பந்தப்பட்ட குழாய்களைப் பரிசீலிக்க இருப்பதாக சுங்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

இங்கிலாந்துப் பத்திரிகையாளரான பர்ஸத்துக்கு ஈராக் மரண தண்டனை விதித்த பிறகு இங்கிலாந்துக்கு, ஈராக்கிற்கும் விரிசல் ஏற்பட்டுள்ளதால், நிபுணர்கள் பரிசீலனை அறிக்கை சமர்ப்பிக்கும் வரை இங்கிலாந்து அரசாங்கம் கருத்துத் தெரிவிக்க மறுத்துள்ளது.

இரண்டாம் உலக யுத்தத்தில் ஜேர்மனியர் பாவித்த குஸ்தாவ் துப்பாக்கியைவிட இது பெரிதானது என்று இராணுவ நிபுணர்கள் அபிப்பிராயம் தெரிவித்துள்ளனர். குஸ்தாவ் துப்பாக்கியின் நீளம் 38 மீற்றராகும்.

ஈராக் இக் குழாய்களைக் கொண்டு இரண்டு தொன் எடையுள்ள குண்டுகளாக ஏவி ஈராக், இஸ்ரேல் ஆகிய நாடுகளை அழிக்க முடியுமாம்.

தனது நாட்டுக்கு எதிராக இஸ்ரேல் அணு ஆயுதத்தைப் பாவித்தால், இஸ்ரேலின் அரைவாசிப் பகுதியை அழிக்கக் கூடிய சக்தி வாய்ந்த கருவிகள் ஈராக்கிடம் இருப்பதாக சென்ற மாதம் ஈராக் ஜனாதிபதி சதாம் குசைன் தெரிவித்தார்.

சென்ற மாதம் ஈராக் நாட்டுக்கு 40 அணுவாயுதத் துப்பாக்கிகளைக் கடத்தும் முயற்சியை பிரிட்டிஷ் அமெரிக்க புலனாய்வுத் துறையினர் முறியடித்தமைக்கும் மிடில்ஸ் பறோவுக்கும் எவ்வித தொடர்புமில்லை என சுங்கப் பிரிவுப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். ஆனால், லண்டன் விமான நிலையத்தில் பிடிபட்ட இந்த ஆயுதக் கடத்தலுக்கும் தமக்கும் தொடர்பில்லை என ஈராக் மறுத்துள்ளது.

இதேவேளை ஈராக்கிற்கு தன்னியக்கப் பீரங்கிகளைத் தயாரித்துக் கொடுப்பவர் என்ற சந்தேகத்தின் பேரில் கனடாவைப் பிறப்பிடமாகக் கொண்ட டாக்ரர் ஜெறால்ட் புள் கடந்த மாதம் இனந் தெரியாதவர்களால் சுடப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

*1950 - 1960* களில் அமெரிக்காவுக்குப், கனடாவுக்கும் செயற்கை கிரகங்களையும் பீரங்கிகள் மூலம் விண்வெளியில் ஏவுவதற்கு உதவும் பீரங்கிகளை தயாரித்துக் கொடுத்து ஜெறால்ட் புள் பிரசித்தி பெற்றவர்.

## வீணை பாலச்சந்தர் காலமானார்

(சென்னை)

வீணை எஸ். பாலச்சந்தர் நேற்று முன் தினம் காலமானார். அவருக்கு வயது அறுபத்திமூன்று கர்நாடக இசையில் ஒரு மேதையாக விளங்கிய திரு. பாலச்சந்தர் பத்மபூஷண் உட்பட பல விருதுகளைப் பெற்றவர்.

தமிழ்த் திரைப்படத்தயாரிப்பாளராகவும், இயக்குனராகவும், நடிகராகவும் விளங்கிய திரு. பாலச்சந்தர் எதிலும் தனக்கென ஒரு பாணியை வகுத்துத் தனிததுவம் பெற்றவர்.

''வீணை வித்துவானும் நடிகரும்'' என்று இணைத்துச் சொல்லப்படுவதை அவர் வெறுத்தார். வீணை என்பது மகதத்துவமானது; அதை நடிப்புடன் சேர்த்துக் கொள்ளக் கூடாதுஎன்பது அவர் கருத்து.

யாழ்ப்பாணத்தில் ஒரு நடன அரங்கேற்ற வைபவத்தில் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்ட திரு. பாலச்சந்தர் அந்த அரங்கேற்றத்துக்குக் காரணமாயிருந்த தமது நண்பரை ''இன்றோடு நடனவாங்கத்தைக்கைவிடுங்கள்'' என்று ஆலோசனை கூறியிருந்தார்.

## கட்டுரை பேச்சுப்போட்டி

(கொழும்புத்துறை)

உலகத் தமிழர் பண்பாட்டு இயக்க இலங்கைக் கிளை அகில இலங்கை ரீதியாகக் கட்டுரைப்போட்டி பேச்சுப் போட்டிகளை நடாத்தத் திட்டமிட்டுள்ளது.

# லித்வேனிய பிரச்சினையை பேசித் தீர்க்கவேண்டும்

## பிரிட்டிஷ் அமைச்சர் கூறுகிறார்

(லண்டன்)

லித்வேனியா மீது சோவியத் அரசு பொருளாதார தடை விதிக்குமேயானால் மேற்கத்தேச நாடுகளுடனான பேரத்தில் சோவியத் யூனியனுக்கு தண்டனை கிடைக்கும் என்று பிரித்தானிய வெளியுறவு அமைச்சர் டக்ளஸ் கேட் எச்சரித்துள்ளார்.

லித்வேனியாவுடனான கருத்து வேறுபாடுகளை தீர்க்க பேச்சுவார்த்தை நடத்த வேண்டுமேயன்றி இராணுவ நடவடிக்கை மூலமோ அல்லது பொருளாதார தடைகளையோ விதிக்கக் கூடாது என்று மேற்கத்தேச நாடுகள் கேட்கின்றன என்றும் அவர் குறிப்பிட்டார்.

லித்வேனியா சுதந்திரப் பிரகடனம் செய்த பின்னர் நிறைவேற்றிய புதிய திட்டங்களைக் கைவிட சோவியத்யூனியன் காலக்கெடு கொடுத்திருக்கிறது.

இதேவேளை சோவியத் அரசு பொருளாதாரத் தடையை தாம் லித்வேனியா மீது விதிக்கப்போவதில்லை என்று கூறியிருக்கிறது. கிழக்கு ஐரோப்பிய நாடுகள் முன்னர் விட்ட தவறை தாம் இனியும் விடப்போவதில்லை என்று குறிப்பிட்டிருக்கிறது.

## உல்லாசப் பயணிகள் அதிகரிப்பு

(ஈச்சமோட்டை)

இந்திய அமைதிப் படையினர் சென்றதை அடுத்து சாகரநகர் சசூரினா பீச்சுக்கு வரும் உல்லாசப் பயணிகள தொகை அதிகரித்து வருகிறது.

சில உல்லாசப்பயணிகள் அங்கு வரும் இளைஞர்களால் அவஸ்தைக்கு உள்ளாக்கப்படுகின்றனர். ஒரு சில இளைஞர்கள் சாராயப் போத்தல்களுடன் அங்கு சென்று குடித்துவிட்டு மதுபோதையில் அங்கு செல்லும் இளம் பெண்கள் மீது சேட்டை விடுகிறார்கள். இதனால் ஒருமுறை செல்லும் உல்லாசப்பயணிகள் மறுமுறை போகத் தயக்கம் அடைகின்றனர். ஆகவே தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் அங்கு பாதுகாப்புநடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். (43)

# தெ. ப. பொ. கூ. சங்கங்கள் லாபத்தில் இயங்குகின்றன

(கிளிநொச்சி)

கிளிநொச்சி தெங்கு பனப் பொருள் கூட்டுறவு சங்கங்கள் தற்போது முன்னேற்றம் அடைந்துவருவது மகிழ்ச்சியை அளிக்கின்றது

கடந்த வாரம் இந்தச் சங்கங்கள் சில நிதி பற்றாக்குறை காரணமாக சம்பளங்களை வழங்க முடியாத நிலை இருந்தது.

தற்போது இப்பிரதேசங்களில் சமாதானம் நிலவுவதன் காரணமாகப் பலதரத்திலான ஒத்துழைப்பும் இச் சங்கங்களுக்குக் கிடைக்கின்ற காரணத்தினால் அநேகமாக எல்லாச் சங்கங்களும் லாபத்தில் இயங்கக்கூடிய நிலை உருவாகி உள்ளது.

கிளிநொச்சி பிரதேச தெங்கு பனம பொருள் சங்கம் கடந்த மாதத்தில் 1, 15,000/- சுத்த லாபம் பெற்றது.

இச்சங்கத்தினுடைய நிர்வாகத்திறமை காரணமாகவே மிகவும் கீழ்நிலையில் இருந்த இச்சங்கம் இந்த நிலைக்கு வந்துள்ளது.

# பாகிஸ்தான் பதட்டத்தை அதிகரிக்கின்றது இந்தியாவும் எதற்கும் தயார்

## வி. பி. சிங்

(டில்லி)

காஷ்மீர் விவகாரத்தில் பாகிஸ்தான் பதட்டத்தை அதிகரித்து வருவதாக இந்திய பிரதம மந்திரி வி. பி. சிங் மீண்டும் குற்றம் சாட்டி வருகிறார்.

பாகிஸ்தானின் ஆயுதப் படைகள் எல்லா வகையிலும் தயார்நிலையில் நின்று கொண்டிருப்பதாகவும், கவசவாகனங்கள் இந்திய எல்லைக்கு கொண்டுவரப் பட்டிருப்பதாகவும், விமானத் தளங்களில் விமானங்கள் ஆயத்தநிலையில்

அதேவேளை இந்தியாவும் எந்தவித நிலைமையையும் ஏற்க ஆயத்தமாகிவிட்டதாகவும் குறிப்பிட்டார். போர் ஒன்று நிகழுமேயானால், இதன விளைவால் பாதிக்கப்படப்போவது பாகிஸ்தானிய அரசுதான் என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஆனால் புதிய நடமாட்டம் ஏதும் இல்லையென்று பாகிஸ்தானில் உள்ள இராணுவ அதிகாரிகள் மறுத்துவருகிறார்கள்

ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் இந்திய எதிர்ப்பு கிளர்ச்சிக்கு தொடர்ந்து பதட்டம் அதிகரித்து வருகிறது

இதனிடையே காஷ்மீர் மாநிலத்தில் பாவார் என்னும் நகரத்தில் முஸ்லிம் தீவிரவாதிகள் மீது பொலிசார் சுட்டதில் ஐந்துபேர் வரை கொல்லப்பட்டதாக அதிகாரிகள் தெரிவிக்கிறார்கள் இரண்டாயிரம் பேர் அடங்கிய கூட்டத்தில் பொலிசார் நடத்திய குண்டுத் தாக்குதலினால் பலர்காயமடைந்துள்ளார்கள்.

அத்துடன் அந்நகரத்தில் ஊர

# இன்று யாழ். இந்து-சென்ஜோன்ஸ் விறுவிறுப்பான கிரிக்கெட் போட்டி

(யாழ் விளையாட்டுநிருபர்)

யாழ் இந்துக் கல்லூரிக் சென் ஜோன்ஸ் கல்லூரிக்கு மிடையில் சிநேக பூர்வமான கிரிக்கட் போட்டி இன்றும் நாளையும் யாழ் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெறும். யாழ்ப்பாணத்தில் இதுவரைக்கும் நடைபெற்ற கிரிக்கெட் போட்டிகளில் இரு கல்லூரிகளும் மிகவும் சிறப்பாக விளையாடி ஒரு போட்டிகளிலும் தோல்வி காணாமல் இருப்பது குறிப்பிடத்தக்கது.

யாழ் இந்துக் கல்லூரி கலந்து கொண்ட போட்டிகளில் நான்கு போட்டிகளில் இன்னிங்ஸ் வித்தியாசத்தால் வெற்றி ஈட்டியது.

கல்லூரி தனது முழுப்பலத்தையும் பாவித்து இப்போட்டியில் வெற்றி வாகை சூடும் நோக்கம் உண்டு.

இக்கல்லூரியின் பொறுப்பாசிரியராக நா. சோமசுந்தரம் விளங்குகிறார். இக் கல்லூரியின் பயிற்சியாளராக திரு எஸ் தயாளன் கடமை புரிகிறார். இவர் யாழ். இந்துக் கல்லூரிக்கு சிறப்பான பயிற்சி அளித்திருக்கிறார்.

சென் ஜோன்ஸ் கல்லூரியும் தான் பங்கு பற்றிய கிரிக்கெட்போட்டிகளில் தோல்வி காணாமல் இருப்பது குறிப்பிடத்தக்கது. சென் ஜோன்ஸ் கல்லூரி யாழ் மத்திய கல்லூரியை இனிங்சால் வெற்றி ஈட்டியது. இப் போட்டியில் விக்கட்டுக்களால் வெற்றியீட்டியது. கே. பிரசாந்தன், பி முரளி, எஸ். சுரேன்குமார், அதிக ஓட்டங்களைப் பெற்றிருக்கிறார்கள். கே. பிரசாந்தன், எஸ் சதீசன், பி. முரளி மிகவும் திறம்பட பந்து வீசி அதிக விக்கட்டுக்களை கைப்பற்றியமை குறிப்பிடத்தக்கது. சென்ஜோன்ஸ் கல்லூரியின் பொறுப்பாளராக திரு. அமலதாஸ் விளங்குகிறார். இக் கல்லூரியின் பயிற்சியாளராக திரு. சூரியகுமார் விளங்குகிறார். இக் கோஷ்டியின் வெற்றிகளுக்கு காரணமே இவரேயாவார். இப்போட்டியில இரு கல்லூரிகளின் திறமை வாய்ந்த துடுப்பாட்டக்காரர்களும்,

வெறுத்தார். வினை என்பது மகத்துவமானது; அதை நடிப்புடன் சேர்த்துக் கொள்ளக் கூடாதுஎன்பது அவர் கருத்து.

யாழ்ப்பாணத்தில் ஒரு நடன அரங்கேற்ற வைபவத்தில் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்ட திரு. பாலச்சந்தர் அந்த அரங்கேற்றத்துக்குக் காரணமாயிருந்த தமது நண்பரை ''இன்றோடு நடனத்தைக்கைவிடுங்கள்'' என்று ஆலோசனை கூறியிருந்தார்.

## கட்டுரை பேச்சுப்போட்டி

(கொழும்புத்துறை)

உலகத் தமிழர் பண்பாட்டு இயக்க இலங்கைக் கிளை அகில இலங்கை ரீதியாகக் கட்டுரைப்போட்டி பேச்சுப் போட்டிகளை நடாத்தத் திட்டமிட்டுள்ளது.

அடுத்த மாதம் 11ஆம் திகதியும் நடைபெற இருக்கும் பண்பாட்டு இயக்க மகாநாட்டை யொட்டி இக்கட்டுரை பேச்சுப்போட்டிகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

ஆண், பெண் இருபாலாருக்கும் தனித்தனியே போட்டிகள் நடாத்தப்படுமென்றும் கீழ்ப்பிரிவு, மத்தியப் பிரிவு மேற்பிரிவுகள் ரீதியாக போட்டிகள் இடம் பெறுமென்றும் விபரங்களுக்கு 67, புகையிரத நிலைய வீதியில் உள்ள உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்க அலுவலகத்தில் தொடர்பு கொள்ளுமாறும் அறிவிக்கப் பட்டுள்ளது. (24)

## பருத்தித்துறையில் நிவாரணக் கொடுப்பனவு தொடர்கிறது

(பருத்தித்துறை)

பருத்தித்துறை இலங்கை வங்கிக் கிளையில் தொடர்ந்தும் மீளக்குடியமர்தல் நிவாரணம் மக்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றது.

பருத்தித்துறை பொலிஸ் நிலையம் மூடப்பட்டமையால் பருத்தித்துறை இலங்கை வங்கி நடவடிக்கைகள் எதுவும் பாதிப்படையவில்லை.

இவ்வங்கியில் தமிழீழ விடுதலைப் புலிகள் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டுள்ளனர். (55)

## வவுனியா கச்சேரியில் 14 பட்டதாரிகள் பயிற்சி

(வவுனியா)

வடக்கு-கிழக்கு மாகாண சபையினால் நியமனம் பெற்ற பதினான்கு பட்டதாரிகள் வவுனியா கச்சேரியில் பயிற்சி பெற்று வருகின்றனர்.

ஆறு பெண்களும், எட்டு ஆண்களுமாக பயிற்சியை மேற்கொண்டுள்ளனர். இவர்களுக்கான பயிற்சி சில மாதங்களுக்கு நடைபெறும் என்று தெரிவிக்கப் பட்டது. (தி)

# பாகிஸ்தான் பதட்டத்தை அதிகரிக்கின்றது இந்தியாவும் எதற்கும் தயார்

**வி. பி. சிங்**

(டில்லி)

காஷ்மீர் விவகாரத்தில் பாகிஸ்தான் பதட்டத்தை அதிகரித்து வருவதாக இந்திய பிரதம மந்திரி வி. பி. சிங் மீண்டும் குற்றம் சாட்டி வருகிறார்.

பாகிஸ்தானின் ஆயுதப் படைகள் எல்லா வகையிலும் தயார்நிலையில் நின்றுகொண்டிருப்பதாகவும், கவசவாகனங்கள் இந்திய எல்லைக்கு கொண்டுவரப்பட்டிருப்பதாகவும், விமானத் தளங்களில் விமானங்கள் ஆயத்தநிலையில் இருப்பதாகவும் இந்தியப் பிரதமர் வி. பி. சிங் கூறினார்.

அதேவேளை இந்தியாவும் எந்தவித நிலைமையையும் ஏற்க ஆயத்தமாகிவிட்டதாகவும் குறிப்பிட்டார். போர் ஒன்று நிகழுமேயானால், இதன விளைவால் பாதிக்கப்படப்போவது பாகிஸ்தானிய அரசுதான் என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஆனால் புதிய நடமாட்டம் ஏதும் இல்லையென்று பாகிஸ்தானில் உள்ள இராணுவ அதிகாரிகள் மறுத்துவருகிறார்கள்

ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் இந்திய எதிர்ப்பு கிளர்ச்சிக்கு பாகிஸ்தான் ஆதரவுதருவதை இந்தியா குற்றம் சாட்டியதை தொடர்ந்து பதட்டம் அதிகரித்து வருகிறது.

இதனிடையே காஷ்மீர் மாநிலத்தில் பாவார் என்னும் நகரத்தில் முஸ்லிம் தீவிரவாதிகள்மீது பொலிசார் சுட்டதில் ஐந்துபேர் வரை கொல்லப்பட்டதாக அதிகாரிகள் தெரிவிக்கிறார்கள் இரண்டாயிரம்பேர் அடங்கிய கூட்டத்தில் பொலிசார் நடத்திய குண்டுத் தாக்குதலினால் பலர்காயமடைந்துள்ளார்கள்.

அத்துடன் அந்நகரத்தில் ஊரடங்குச் சட்டமும் அமுல் படுத்தப்பட்டுள்ளது

# பிரச்சினைகளைத் தீர்க்க மாநிலங்களுக்கு இடையிலான சபை

(புதுடில்லி)

மாநிலங்களுக்கிடையிலான விவகாரங்களை ஆய்வு செய்து, பிரச்சினைகள் ஏதேனும் இருப்பினும் அவற்றைத் தீர்ப்பதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை பரிந்துரை செய்ய வகை செய்யும் மாநிலங்களுக்கு இடையிலான சபை ஒன்று உருவாக்கப்படுகிறது.

இந்தியப் பிரதம மந்திரி திரு. வி. பி. சிங்கைத் தலைவராகக் கொண்ட இந்தச் சபையில் அனைத்து மாநில முதலமைச்சர்களும் ஆறு மத்திய அமைச்சர்களும் உறுப்பினர்களாக இருப்பார்கள்.

இந்தச் சபை குறைந்தது ஆண்டுக்கு ஒரு முறையாவது கூடும்.

நேற்று புதுடில்லியில் நடைபெற்ற மாநில முதலமைச்சர்களின் கூட்டத்தில், இந்தச் சபை அமைப்பதற்கான யோசனை ஒரு மனதாக அங்கீகரிக்கப்பட்டது. இந்தச் சபை ஒன்றுக்கு மேற்பட்ட முறைகள் கூட்ட வேண்டும் என்றும் அதற்கு பரவலாக அதிகாரங்கள் அளிக்கப்பட வேண்டுமென்றும் நேற்றைய கூட்டத்தில் கலந்துகொண்ட முதலமைச்சர்கள் யோசனை தெரிவித்தார்கள்.

காஷ்மீர் நிலமை பற்றியும் முதலமைச்சர்கள் மாநாட்டில் நேற்று விவாதிக்கப்பட்டது. காஷ்மீர் பிரச்சினைக்கு தீர்வு ஒன்றைக் காண்பதற்கு மத்திய அரசுக்கு முழு ஆதரவு அளிப்பதாக முதலமைச்சர்கள் நேற்று பிரதமமந்திரியிடம் தெரிவித்தனர்.

## எல்லா சமூக மக்களையும் கலந்தே சீர்திருத்தம்

(காட்மண்டு)

நேபாள அரசியல் அமைப்பில் சீர்திருத்தங்கள் செய்யும்போது சமூகத்தில் எல்லாப் பிரிவினரும் கலந்து ஆலோசிக்கப்படுவார்கள் என்று நேபாள மன்னர் பிரேந்திரா அறிவித்திருக்கிறார்

கடந்த வெள்ளிக்கிழமை மன்னர் பிரேந்திரா நேபாளிய காங்கிரஸ் கட்சித் தலைவர்களையும், கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களைவும் சந்தித்து இடைக்கால அரசு ஒன்றை அமைப்பது பற்றி பேச்சுவார்த்தை நடத்தினார் இப்பேச்சுவார்த்தையின் போது உடன்பாடு ஒன்று ஏற்பட்டிருப்பதாக இயக்கத் தலைவர்கள் கூறியிருக்கிறார்கள் மேலும் நேற்று ஒரு சுற்றுப் பேச்சுவார்த்தை நடைபெற்றது.

## தொழுநோய் சம்பந்தமாக கிளிநொச்சியில் கருத்தரங்கு

(கிளிநொச்சி)

தொழுநோய் பற்றிய கருத்தரங்கொன்று நாளை ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சியில் நடைபெறவுள்ளது.

மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி திரு. எம். யோககவினாயகம் தலைமையில் மேற்படி அலுவலகத்தில் நடைபெறும் இக் கருத்தரங்கில் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த சகல பதிவு செய்யப்பட்ட வைத்திய அதிகாரிகளும் (ஆர். எம். ஓ), பதிவு செய்யப்படாத வைத்திய அதிகாரிகளும் (ஏ.எம். பி) கலந்து கொள்வர்.

வடபிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் திரு. என். கனகசபையினால் இக் கருத்தரங்கு நடாத்தப்பட உள்ளது.

## பஞ்சாப், காஷ்மீர் பிரச்சினை அரசு தவறாகக் கையாள்கிறது

**- ராஜீவ்**

(டில்லி)

பஞ்சாப் ஜம்மு - காஷ்மீர் பிரச்சினைகளை தவறாக சமாளிப்பதை மூடி மறைப்பதற்காக போர் பற்றிய பீதியை மத்திய அரசு உருவாக்குகிறது. என்று இந்திரா காங்கிரஸ், மற்றும் எதிர்க் கட்சித் தலைவருமான ராஜீவ்காந்தி கூறியுள்ளார்.

இக் குற்றச்சாட்டை மறுத்த இந்திய உள்துறை அமைச்சர் முக்தி முகமது செய்யது, பஞ்சாப்பிலும், ஜம்முகாஷ்மீரிலும் நிலமை சீர் கெடும்படி செய்தது முன்னைய அரசுதான் என்று கூறினார்.

# விறுவிறுப்பான கிரிக்கெட் போட்டி

(யாழ் விளையாட்டுநிருபர்)

யாழ் இந்துக் கல்லூரிக் சென் ஜோன்ஸ் கல்லூரிக்கு மிடையில் சிநேக பூர்வமான கிரிக்கட் போட்டி இன்றும் நாளையும் யாழ் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெறும். யாழ்ப்பாணத்தில் இதுவரைக்கும் நடைபெற்ற கிரிக்கெட் போட்டிகளில் இரு கல்லூரிகளும் மிகவும் சிறப்பாக விளையாடி ஒரு போட்டிகளிலும் தோல்வி காணாமல் இருப்பது குறிப்பிடத் தக்கது.

யாழ். இந்துக் கல்லூரி கலந்து கொண்ட போட்டிகளில் நான்கு போட்டிகளில் இன்னிங்ஸ் வித்தியாசத்தால் வெற்றி ஈட்டியது. யாழ். மத்திய கல்லூரியுடன் மோதியபோது 6 விக்கட்டுகளால் வென்றது யாழ்ப்பாணக் கல்லூரியுடன் மோதியபோது 10 விக்கெட்டுகளால் வென்றது. யாழ் இந்துக் கல்லூரியின அணியில் சிறந்த துடுப்பாட்டக்காரர்களும் சிறந்த பந்து வீச்சாளர்களும் அடங்கியுள்ளனர்.

யாழ். இந்துக் கல்லூரியின் அணித்தலைவர் எஸ். ஜெயராஜ் இவ்வருடம் நடைபெற்ற கிரிக்கெட் போட்டிகளில் அதிக ஓட்டங்களைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது. இவர் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரிக்கு எதிராக 126 ஓட்டங்களையும் மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கு எதிராக 106 ஓட்டங்களையும் ஆட்டம் இழக்காமல் பெற்றுள்ளார்.

யாழ். இந்துக் கல்லூரியின் அணியில் எஸ். ஜெயராஜ் ஆர். சபிலன் ஆர். வரதன் எஸ். இராஜசேகர் எஸ். வரதன் எஸ். சசிசேகர் எஸ், பிரபாகரன் சிறந்த துடுப்பாட்டக்காரர்களாக கருதுகிறார்கள் எஸ் ஜெயதீபன் எஸ், பிரபாகரன் எஸ். வரதன் க. பிரதீபன் திறம்பட பந்து வீசி யாழ் இந்துக் கல்லூரிக்கு பல விக்கட்டுகளை கைப்பற்றியமைகுறிப்பிடத்தக்கது.

இம்மாபெரும் கிரிக்கெட் போட்டியில் யாழ். இந்துக் கல்லூரி தனது முழுப்பலத்தையும் பாவித்து இப்போட்டியில் வெற்றி வாகை சூடும் நோக்கம் உண்டு.

இக்கல்லூரியின் பொறுப்பாசிரியராக நா. சோமசுந்தரம் விளங்குகிறார். இக் கல்லூரியின் பயிற்சியாளராக திரு எஸ் தயாளன் கடமை புரிகிறார். இவர் யாழ். இந்துக் கல்லூரிக்கு சிறப்பான பயிற்சி அளித்திருக்கிறார்.

சென் ஜோன்ஸ் கல்லூரியும் தான் பங்கு பற்றிய கிரிக்கெட்போட்டிகளில் தோல்வி காணாமல் இருப்பது குறிப்பிடத்தக்கது. சென் ஜோன்ஸ் கல்லூரி யாழ் மத்திய கல்லூரியை இனிங்சால் வெற்றி ஈட்டியது இப் போட்டியில் சென் ஜோன்ஸ் கல்லூரி திறம்பட விளையாடுவார்கள் என கிரிக்கெட் ரசிகர்கள் கருதுகிறார்கள். இக் கோஷ்டிக்கு எஸ். சதீஸ்சன் தலைமை தாங்குகிறார். சென்ஜோன்ஸ் கல்லூரி 2 போட்டிகளில் இனிங்ஸால் வெற்றியீட்டியிருக்கிறார்கள். வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியுடன் மோதியபோது சென்ஜோன்ஸ் கல்லூரி 10 விக்கட்டுக்களால் வெற்றியீட்டியது. கே. பிரசாந்தன், பி முரளி, எஸ். சுரேன்குமார், அதிக ஓட்டங்களைப் பெற்றிருக்கிறார்கள். கே. பிரசாந்தன், எஸ் சதீசன், பி. முரளி மிகவும் திறம்பட பந்து வீசி அதிக விக்கட்டுக்களை கைப்பற்றியமை குறிப்பிடத்தக்கது. சென்ஜோன்ஸ் கல்லூரியின் பொறுப்பாளராக திரு. அமலதாஸ் விளங்குகிறார். இக் கல்லூரியின் பயிற்சியாளராக திரு. சூரியகுமார் விளங்குகிறார். இக் கோஷ்டியின் வெற்றிகளுக்கு காரணமே இவரேயாவார். இப்போட்டியில இரு கல்லூரிகளின் திறமை வாய்ந்த துடுப்பாட்டக்காரர்களும், சிறந்த பந்து வீச்சாளர்களும் இருப்பதால் இந்தப் போட்டியில் யாழ் இந்துக் கல்லூரியா அல்லது சென்ஜோன்ஸ் கல்லூரியா திறமை வாய்ந்த அணி என்பதை அறிய முடியும் இப்போட்டிக்கு அதிகமான கிரிக்கெட் ரசிகர்கள் சமுகமளிப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது (42)

## கரபந்தாட்டப் போட்டி கச்சேரி கிழக்கு ச. ச. நி. வெற்றி

(யாழ் விளையாட்டு நிருபர்)

கச்சேரி கிழக்கு சனசமூக நிலைய விளையாட்டுக் கழகத்திற்கும் உடுவில் சென் மேரிஸ் விளையாட்டுக் கழகத்திற்கும் மிடையில் அரியாலை விளையாட்டு மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற கரபந்தாட்ட போட்டியில் கடும் போட்டியின் மத்தியில் கச்சேரி கிழக்கு சனசமூக நிலைய அணி 3-1 என்ற செற்கணக்கில் வெற்றியீட்டியது

வெற்றியீட்டிய ஸ்கோர் விபரம் 15-13, 7-15, 15-11

இரண்டாவது செற்றை 7 புள்ளிகளை மாத்திரமே பெற்று பல பிழைகள் விட்டதினால் மூன்றாவது செற் ஆரம்பத்தில் பதட்ட நிலை உருவாகியது. பின் படிப்படியாக கச்சேரி கிழக்கு சனசமூக நிலைய அணி மிகத்திறம்பட விளையாடி வெற்றி பெற்றனர். கச்சேரி அணியின் வீரன் எஸ் கே. பரமலிங்கம் பந்தை மிகவும் பலமாகவும், உற்சாகத்துடன், நிதானமாகவும் விளையாடி ரசிகர்களின் பாராட்டுக்களைப் பெற்றார். இவரின் சிறப்பான விளையாட்டுத்தான் இவரின் அணிக்கு வெற்றியைக் கொடுத்தது. மத்தியஸ்தராக கப்ரன் எம். குணசிங்கம் கடமை புரிந்தார். (42)

## கவிதைப் போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

நயினாதீவு மணிபல்லவ கலாமன்றத்தினரால் 28 ஆவது ஆண்டு விழாவையொட்டி நடாத்தப்பெற்ற கவிதைப்போட்டி முடிவுகள் அம்மன்றத்தின் தலைவரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

1ஆம், 2ஆம், 3ஆம், 4ஆம், 5ஆம் இடங்களை முறையே இரா. நெடுஞ்செழியன், க. காமாட்சிசுந்தரம், வெ. ஐயாத்துரை, சி. பரராசசிங்கம், சுப்பிரமணியம், அண்ணாத்துரை ஆகியோர் பெற்றுள்ளனர்.


இப்போட்டியின் நடுவர் குழுவினராக கவிஞர்கள் இ முருகையன், க. சொக்கலிங்கம், செ. சுந்தரம்பிள்ளை ஆகியோர் கலந்து கொண்டனர்.

### தியாக வேள்விக்குத் தம்மை அர்ப்பணித்த

### மாந்தருள் மாணிக்கம்

## அன்னை பூபதிக்கு

# எமது இதய அஞ்சலிகள்









இன்ன லுற்றநம் இன்றமிழ் மாந்தரின்
இன்னல் நீங்கிநல் இனிமை பூத்திட
பின்னலாகவே பிடித்த பெருந் துயர்ப்
பீடையிருளது பாடை யேறிட
மன்னராடிய மணித்தமி ழீழமண்
மகிழ்வி லாடியோர் மாண்பை எய்திட
அன்னை "பூபதி" ஆருயிர் தன்னையே
அர்ப்பணித் தேயுயர் அகல் விளக்காகினள்.

நேசக் கரமென நீட்டி முழக்கிய
நீச அன்னியர் நிலையை உணர்த்திட
"தேச விடுதலை தன்னை மேலெனத்
திரண்ட மறவரின் தலைகள் கொய்திடப்
'பாசம்' கொண்டதோர் நாச காரர்தம்
பாசிசத் தனப் பண்பை உணர்த்திட"
ஆசிக்குரிய நம் அன்னை பூபதி
ஆவி தன்னையே அர்ப்பணித்தனள்.

மண்ணகம் புகழ் மகாத்துமா வழி
மதித்துமே யதிற் தடம் பதித்தனள்!
உண்ண மறுத்துயர் உறுதி பூண்டுமே
உரிமை பெரிதென உயிர் விடுத்தனள்!
பெண்மை தெய்வமாய்ப் போற்று முலகிலெம்
பெரிய தாய்ச்சுடர் எரிந்து மாண்டதே
உண்மையாய் இரு வருடமல்ல ஓர்
ஊழியின் பின்னும் தாயை வாழ்த்துவோம்!

- நிலாதமிழின்தாசன்

# காங்கேசன்துறை மக்கள் தொண்டன் அமரர் க. தனபாலசிங்கத்தின் நண்பர்கள்

(R-186)

### சிந்தனைக்கு

நீங்களே உங்களை நாணயமுள்ளவர்களாக மாற்றிக் கொளளுங்கள். அப்போது உலகில உள்ள அயோக்கியர்களின் எண்ணிக்கையில் ஒன்று குறையும்.

- கார்லைல்

ஈழநாதம்

31. வைமன் வீதி. யாழ்ப்பாணம். 16 - 04 - 90

தொலைபேசி
ஆசிரிய பீடம்: 025-2839 நிர்வாக பீடம்: 2208

## வீதிகள்தோறும் இறைச்சிக் கடைகள்

ஷெல் அடியும் குண்டு வீச்சும் படைகளின் நடமாட்டங்களும் சில வியாபாரங்களை வீடுவரை கொண்டுபோய்ச் சேர்த்தது.

இப்பொழுது ஷெல் அடி, குண்டு வீச்சு, படை நடமாட்டம் இல்லை. வீடுகளுக்கும் வீதிகளுக்கும் சென்ற வியாபாரம் மீண்டும் கடைத்தெருவுக்குப் போய்ச் சேர்ந்துவிட்டன.

ஆனால் வீதிகள்தோறும் வியாபித்துள்ள இறைச்சிக் கடைகள்மட்டும் இன்னும் பெருகிக்கொண்டிருக்கின்றனவே தவிர குறையக் காணோம்.

யாழ்ப்பாண நகரில் இறைச்சிக் கடைகள் இல்லாத தெருவே இல்லை என்று சொல்லுமளவிற்கு வீதிகளில் இறைச்சிக் கடைகள் திறக்கப்பட்டிருக்கின்றன.

காலையில் எந்த வீதியில் சென்றாலும் ஆடுகளும் மாடுகளும் இறைச்சியாகத் தொங்கிக்கொண்டிருக்கும் காட்சிகளே கண்ணில் படுகின்றன.

வீதியெங்கும் பரவிப் படர்ந்திருக்கும் இறைச்சிக் கடைகள் அத்தனையும் யாழ். மாநகரசபையின் அனுமதி பெற்றவைதானா?

மாநகரசபையின் அனுமதி பெற்றிருந்தால் எந்த அடிப்படையில் மாநகரசபை இவற்றுக்கு அனுமதி வழங்கியிருக்கிறதென்பது வெளிப்படுத்தப்பட வேண்டும்.

வீதிகள்தோறும் கசாப்புக் கடைகள் திறப்பதற்கு அனுமதி வழங்கும்போது மக்களின் சுகாதாரம் பற்றி மாநகரசபை சிந்திக்காதது ஏனோ?

இந்தக் கடைகளில் விற்கப்படும் இறைச்சி சுகாதாரப் பகுதியினரால் பரிசோதனை செய்யப்பட்டவைதானா?

# எமக்கு வாழும் வசதிகளை விட உயிரே முக்கியம்

யாழ்ப்பாணக் காடுகளில் இருந்து மல்கான்கிரி மலைகள் (ஒரிஸா)வரை ஸ்ரீலங்கா தமிழ்ப் போராளிகள் ஒரு நீண்ட பயணத்தைச் செய்துள்ளார்கள். மார்ச் 10ஆம் திகதி முதல் ஈ. பி. ஆர். எல். எவ், ஈ. என். டி. எல். எப் ரெலோவைச் சேர்ந்தவர்கள்-போராளிகளும், ஆதரவாளர்களும் ஒட்டுமொத்தமாக 1,614 மல்கான்கிரி மாவட்டத்திலுள்ள கோராப்புட் பகுதியில் தங்கியுள்ளார்கள்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இந்திய அமைதிப் படைகளுக்கும் இடையிலான யுத்தத்தில், இந்தியப் படைகளுக்கு ஆதரவுநல்கியவர்கள், இந்தியப் படையின் வெளியேற்றத்துடன் சண்டையினால் சீரழிந்த வடக்கு கிழக்கு மாகாணங்களை விட்டுத் தாமும் ஓட்டம் பிடித்துள்ளார்கள். இந்தியாவுக்கு ஆதரவு வழங்கிய சகல எதிரணிக் குழுக்களையும் அழித்தொழிப்பதுதான் விடுதலைப் புலிகளின் நோக்கமாதலால், தமக்கு ஆதரவு வழங்கியவர்களை விடுதலைப் புலிகளிடம் சிக்கிக் கொள்ளாமல், பாதுகாப்பான ஓர் இடத்துக்கு அழைத்துச் செல்வதுதான் தர்மமாகும்.

ஆனால் ஈ. பி. ஆர். எல். எவ்., ஈ என். டி. எல். எவ்., ரெலோவைச் சேர்ந்த அரசியற் பிரிவு முக்கியஸ்தர்கள், தம்மை ஒரிஸ்சாவில் ஒதுக்குப் புறமான ஒரு இடத்துக்கு அழைத்து வருவார்களென எதிர்பார்த்திருக்கவில்லை. நீண்ட பல காலங்களாக ஸ்ரீலங்கா தமிழ்ப் போராளிகளை ஆதரித்து வந்த தமிழ்நாடு அரசு தமக்கும் புகலிடம் வழங்கும் என்பது போராளிக் குழுக்களின் எதிர்பார்ப்பாகும். இந்திய அமைதிப் படையினரால் அமர்த்தப்பட்ட கப்பல்கள் சென்னைத் துறைமுகத்துக்கு வந்ததும், தமிழ்நாடு அரசு அகதிகளை வியத்நாம் படகு அகதிகளைப்போல் நடத்தியது.

### அரசாங்க விருந்தினர்

தமிழ் நாட்டில் புகலிடம் வழங்கினால் போராளிக் குழுக்களுக்கிடையில் ஏற்படும் சண்டையினால், தமிழ்நாடு ஒரு குருஷேத்திரமாக மாறிவிடும் என்ற காரணத்தைக் கூறி, தமிழ் நாடு முதலமைச்

தலைவும், திப்பு சுல்தானும் அகதிகளோடு சென்னைத் துறைமுகத்துக்கு வந்தபோதுதான் வி. பி. சிங் ஒரிஸா முதலமைச்சர் பட்நாய்க்குடன தொடர்பு கொண்டார். முதலமைச்சர் அகதிகளுக்கு ஒரிஸாவில் புகலிடம் வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்தார். அவர்களை அரசாங்க விருந்தினராகவும் ஏற்றுக் கொண்டார்.

எல்லாவற்றிற்தும் மேலாக விடுதலைப் புலிகள் பற்றிய பயம்தான் கடுமையான பாதுகாப்பு ஒழுங்குகளுக்கான காரணமாகவும் ஈ.பி ஆர் எல்.எவ் முகாமில் பந்தோபஸ்து மிகக் கடினம். உண்மையில் விடுதலைப் புலிகளின் ஆவி ஒரிஸாவிலும் போராளிகளை வட்டமிட்ட வண்ணமிருக்கின்றது படப்பிடிப்பாளர் படம் பிடிக்கவும் தமது பெயர்களை சொல்லவும் பலர் விரும்புவதில்லை. பெயர்களைச் சொன்னால் அல்லது படம் பிடிக்க விட்டால் விடுதலைப் புலிகள் தம் இருப்பிடத்தை அறிந்து விடுவார்கள் என்ற பயப் பிராந்தி அவர்களை வாட்டுகிறது.

பல குழப்பங்களுக்கிடையில் 719 பேரைக் கொண்ட முதல் அகதிகள் குழுவொன்று மார்ச் 10ஆம் திகதி இரவு 11. 30 மணியளவில் மல்கான்கிரியை வந்தடைந்தது. மத்திய அரசும் ஒரிஸா மாநில அரசும் அகதிகள் தொடர்பாக எடுத்த முடிவு, மாநில அரசு அதிகாரிகளுக்கு மார்ச் 9ஆம் திகதிதான் தெரியவந்தது. இதனால் ஒழுங்குகளைக கவனிப்பதற்குப அவர்களுக்கு போதிய அவகாசம் கிடைக்கவில்லை.

உண்மையில், மாவட்டக் கலக்ரர் யோகேந்திரா பட்ராபவும், பொலிஸ் அத்தியட்சர் குர்பச்சர் சிங்கும் தமிழ் அகதிகள் மல்கான்கிரிக்கு வருகிறார்கள் என்ற செய்தியைத் தெரியாமல் புவனேஸ்வரத்துக்கு முதல்நாளே போய் விட்டார்கள். அகதிகள் வந்தடைந்ததும் நிர்வாகம் திக்குமுக்காடியது எப்படியோ அதிகாரிகள் சமாளித்துக் கொண்டார்கள் அகதிகளுடைய கஷ்டங்களுக்கு முகம் கொடுக்கத் தீர்மானித்தார்கள். மார்ச்

எல்லாமாக மூன்று முகாம்கள் அமைக்கப்பட்டன. சக்திகுடாவில் நீர்ப்பாசன நீர்த்தேக்கத்துக்கருகில் அழகான இயற்கை எழில் கொழிக்கும் இடத்தில் ஒரு முகாம் அமைக்கப்பட்டது. 7 கிலோ மீற்றர்களுக்கு அப்பால் மல்கான்கிரி நகரில் ஒரு முகாமும், மல்ஜாங்கிரியில் இரண்டு முகாம்களுமாக மொத்தம் மூன்று முகாம்கள் அமைக்கப்பட்டன. முகாம்களில் பாதுகாப்பு ஒழுங்குகள் மிகப் பலம்.

### பெருமாளின் தாயார்

ஒரிஸ்ஸாவின் விசேட ஆயுதம் தாங்கியபொலிஸ் ஒன்பது பிரிவுகள், கண்ணில் எண்ணெய் விட்டாற்போல் முகாம்களைப் பாதுகாத்து வருகின்றனர். பத்திரிகையாளர் அகதிகளை அணுக முடியாது. ஈ. பி. ஆர். எல். எவ் முக்கியஸ்தர்களும், அதன் பொதுச் செயலாளரான பத்மநாபாவும் தங்கியுள்ள சக்திகுடாவில் பாதுகாப்பு ஏற்பாடுகள் மிகப் பலமாகவுள்ளன. வடக்கு - கிழக்கு மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சர் வரதராஜப் பெருமாளின் தாயாரான செல்லம்மா அண்ணாமலையும், அவரது நெருங்கிய உறவினர்களும், வடக்கு. கிழக்கு மாகாண சபையைச் சேர்ந்த பல உறுப்பினர்களும் இம் முகாமில்தான் தங்கியுள்ளார்கள்.

முதலில் ஈ.பி ஆர்.எல்.எவ் அகதி முகாமிற்குள் பத்திரிகையாளர் நுழைவதற்கு அனுமதி மறுக்கப்பட்டது. ஆனால் ரெலோ, ஈ. என் டி. எல். எவ் முகாம்களில் கெடுபிடி மிகவும் குறைவு.

வற்புறுத்தல்களுக்கும், பிரயத்தனங்களுக்கும் பிறகு கலக்டரும், பொலிஸ் அத்தியட்சகரும் சக்திகுடா முகாமுக்குள் பத்திரிகையாளர் செல்வதற்காக அனுமதியை வழங்கினர்.

எல்லாவற்றிற்கும் மேலாக விடுதலைப் புலிகள் பற்றிய பயம்தான் கடுமையான பாதுகாப்பு ஒழுங்குகளுக்கான காரணமாகவும் ஈ பி ஆர். எல். எவ் முகாமில் பந்தோபஸ்து மிகக் கடினம். உண்மையில் விடுதலைப் புலிகளின் ஆவி ஒரிஸ்ஸாவிலும் போராளிகளை வட்டமிட்ட வண்ணமிருக்கின்றது படப்பிடிப்பாளர் படம் பிடிக்கவும் தமது பெயர்களைச் சொல்லவும் பலர் விரும்புவதில்லை. பெயர்களைச் சொன்னால் அல்லது படம் பிடிக்க விட்டால் விடுதலைப் புலிகள் தம் இருப்பிடத்தை அறிந்து விடுவார்கள் என்ற பயப்பிராந்தி அவர்களை வாட்டுகிறது.

முகாமிற்குள் வசதிகள் குறித்து அகதிகள் சந்தோஷமாகவுள்ளார்கள். மல்கான்கிரியின் கொடுமையான கோடையைத் தவிரக் குறை சொல்வதற்கு அவர்களுக்கு ஒன்றுமில்லையாம்.

''முகாம் எமக்கு வீடுபோல் இருக்கிறது முகாமிலுள்ள வசதிகள் மிகச் சின்ன விஷயங்கள் நாங்கள் உயிர் தப்பியது தான் முக்கியது'' தன்னை இனம் காட்டிக் கொள்ள விரும்பாத வரதராஜப் பெருமாளின் காரியதரிசி

பெருமாளின் தாயாருக்கு 65 வயசு அவருக்குத் தனது பிள்ளைகள் எங்கிருக்கிறார்கள் என்பது தெரியாது. (பெருமாளுக்கு இரு சகோதரர்கள்)

எப்படி, எப்போதுஅகதிகள் வீடு திரும்புவார்கள் என்பதைத் திட்டவட்டமாக ஒருவராலும் சொல்லிவிட முடியாதுமல்தாங்கிலுள்ளஇந்திய அதிகாரிகளும் இவ் விஷயம் தொடர்பாக ஆருடம் கூற விரும்பவில்லை. ''நாட்டில் நிலமை சீரடையும் வரை நாம் இங்கு தான் வாழ வேண்டும்'' என்கிறார் பெனடிக்ற் என்ற பெயருடை ஈ என். டி. எல். எவ் மத்திய குழு உறுப்பினர்.

(தொடரும்)

நன்றி: சண்டே

## பெண்கள் சகல துறைகளிலும் ஆண்களுக்கு நிகராக முன்னேற வேண்டும்

(கிளிநொச்சி)

பெண் அடிமை முறை, சீதன முறை ஆகியன முற்றாக ஒழிக்கப்பட்ட ஒரு புதுமைச் சமு

இச்சங்கத்தின் மூலம் சிறுவர் கல்வி,வளர்ந்தோர் கல்வி, தொழிற் பயிற்சி, சுயதொழில் வேலைவாய்ப்பு ஆகியவற்றை

தைப் பெற்று, அப்பணத்தைக் கொண்டு இத்தொழில்களில் பண்களை ஈடுபடுத்த முடியும்.

இறைச்சிக் கடைகள் திறக்கப்பட்டிருக்கின்றன.

காலையில் எந்த வீதியில் சென்றாலும் ஆடுகளும் மாடுகளும் இறைச்சியாகத் தொங்கிக்கொண்டிருக்கும் காட்சிகளே கண்ணில் படுகின்றன.

வீதியெங்கும் பரவிப் படர்ந்திருக்கும் இறைச்சிக் கடைகள் அத்தனையும் யாழ். மாநகரசபையின் அனுமதி பெற்றவைதானா?

மாநகரசபையின் அனுமதி பெற்றிருந்தால் எந்த அடிப்படையில் மாநகரசபை இவற்றுக்கு அனுமதி வழங்கியிருக்கிறதென்பது வெளிப்படுத்தப்பட வேண்டும்.

வீதிகள்தோறும் கசாப்புக் கடைகள் திறப்பதற்கு அனுமதி வழங்கும்போது மக்களின் சுகாதாரம் பற்றி மாநகரசபை சிந்திக்காதது ஏனோ?

இந்தக் கடைகளில் விற்கப்படும் இறைச்சி சுகாதாரப் பகுதியினரால் பரிசோதனை செய்யப்பட்டவைதானா?

ஆடு மாடுகள் இறைச்சிக்காக வெட்டப்படுவதற்குமுன் மாநகரசபையின் சுகாதாரப் பகுதியினர் அவற்றைப் பார்வையிட்டுப் பரிசோதித்து நோயில்லாத மிருகங்கள்தான என்று உறுதிப்படுத்துகின்றார்களா? இப்பரிசோதனை எங்கே நடைபெறுகின்றது?

நகரின் மீன் சந்தைப் பகுதிக்கே மீண்டும் இறைச்சிக் கடைகளைக்கொண்டு செல்வதற்கு யாழ். மாநகரசபை ஏன் நடவடிக்கை எடுக்கக் கூடாது?

மீன் சந்தையையும் இறைச்சிக் கடைகளையும் ஒரு ஒதுக்குப்புறமான இடத்தில் சுற்றாடல் பழுதாகாத முறையில் சுகாதார வசதிகளுடன் அமைக்க வேண்டியது மாநகரசபையின் கடமை என்பதை மறந்துவிடக்கூடாது.

இப்பொழுது யாழ். நகரில் மீன்சந்தை அமைந்துள்ள இடத்தில் ஓடும் வடிகால்வாய் துர்நாற்றம் வீசுவதுடன் நுளம்பும் மற்றும் பல இருமிகளையும் உற்பத்தி செய்துகொண்டிருக்கிறது

இங்கு மீன் வாங்கச் செல்வோர் தொற்றுநோய்க்கு ஆளாகும் ஆபத்துள்ளது

யாழ். மாநகரசபை தூங்கியது போதும்; கண் விழித்து மீன் சந்தை இறைச்சிக் கடைகள் விஷயத்தில் துரிதமாக நடவடிக்கைகள் மேற்கொள்வது அவசியம்.

...புறமான ஒரு இடத்துக்கு அழைத்து வருவார்களென எதிர்பார்த்திருக்கவில்லை. நீண்ட பல காலங்களாக ஸ்ரீலங்கா தமிழ்ப் போராளிகளை ஆதரித்து வந்த தமிழ்நாடு அரசு தமக்கும் புகலிடம் வழங்கும் என்பது போராளிக் குழுக்களின் எதிர்பார்ப்பாகும். இந்திய அமைதிப் படையினரால் அமர்த்தப்பட்ட கப்பல்கள் சென்னைத் துறைமுகத்துக்கு வந்ததும், தமிழ்நாடு அரசு அகதிகளை வியத்நாம் படகு அகதிகளைப்போல் நடத்தியது.

### அரசாங்க விருந்தினர்

தமிழ் நாட்டில் புகலிடம் வழங்கினால் போராளிக் குழுக்களுக்கிடையில் ஏற்படும் சண்டையினால், தமிழ்நாடு ஒரு குருஷேத்திரமாக மாறிவிடும் என்ற காரணத்தைக் கூறி, தமிழ் நாடு முதலமைச்சர் மு. கருணாநிதி அகதிகளுக்குப் புகலிடம் தந்துதவ மறுத்தார், கேரளம், கர்நாடகம், ஆந்திர மாநில அரசுகள் இந்தப பாரததைச் சுமந்து கொள்ள விரும்பவில்லை. இந்தச் சங்கடததுககுத் தீர்வு காணச் சந்தர்பபம் ஒரிஸாவுக்கு வழஙகப்பட்டது.

ஜனதா தள் ஆட்சி நடைபெறாத தென் மாநிலங்களில் புலம்பெயர்ந்தவர்களுக்குப் புகலிடம் வழங்கப்படும் என்று பிரதமமந்திரி வி. பி. சிங் எதிர்பார்த்தார். ஆனால் அவர் விருபபப்படி நடக்கவிலலை. இந்திய கப்பற் கூட்டுத்தாபனத்துககுச் சொந்தமான ஹெர்சவர்த்தி அரசும் ஒரிஸா மாநில அரசும் அகதிகள் தொடர்பாக எடுத்த முடிவு, மாநில அரசு அதிகாரிகளுக்கு மார்ச் 9ஆம் திகதிதான் தெரியவந்தது. இதனால் ஒழுங்குகளைக கவனிப்பதற்குப அவர்களுக்கு போதிய அவகாசம் கிடைக்கவில்லை.

உண்மையில், மாவட்டக் கலக்ரர் யோகேந்திரா பட்ராபபும், பொலிஸ் அத்தியட்சர் குர்பச்சர் சிங்கும் தமிழ் அகதிகள் மல்கான்கிரிக்கு வருகிறார்கள் என்ற செய்தியைத் தெரியாமல் புவனேஸ்வரத்துக்கு முதல்நாளே போய் விட்டார்கள். அகதிகள் வந்தடைந்ததும் நிர்வாகம் திக்குமுக்காடியது எப்படியோ அதிகாரிகள் சமாளித்துக் கொண்டார்கள் அகதிகளுரா கஷ்டங்களுக்கு முகம் கொடுக்கத் தீர்மானித்தார்கள். மார்ச் 12, 13 ஆம் திகதிகளில் மேலும் அகதிகள் வந்து சேர்ந்தார்கள். இதனால் அகதிகள் எண்ணிக்கை 1,614 ஆக உயர்ந்தது. அகதிகளில் 240 பேர் சிறுவர்கள். சுமார் 50 பேர் வரை நிறைமாதக் கர்பபிணிகள். இவர்களைக் குடியமர்த்துவது என்பது கஷ்டமான காரியம். வார இறுதியில் வந்த மூன்று நாட்கள் ஹோலிப் பண்டிகை விடுமுறையின்போது மேற்கொள்ளப்பட்ட உண்மையான உழைப்பின் பயனாய் ஒரு வார காலத்துக்குள் உதவி வேலைகள் பூர்த்தியாகின

பிரிவுகள், கண்ணில் எண்ணெய் விட்டாற்போல் முகாம்களைப் பாதுகாத்து வருகின்றனர். பத்திரிகையாளர் அகதிகளை அணுக முடியாது. ஈ. பி. ஆர். எல். எவ் முக்கியஸ்தர்களும், அதன் பொதுச் செயலாளரான பத்மநாபாவும் தங்கியுள்ள சக்திகுடாவில் பாதுகாப்பு ஏற்பாடுகள் மிகப் பலமாகவுள்ளன. வடக்கு - கிழக்கு மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சர் வரதராஜப் பெருமாள் கலெக்டரும், பொலிஸ் அத்தியட்சகரும் சக்திகுடா முகாமுக்குள் பத்திரிகையாளர் செல்வதற்காக அனுமதியை வழங்கினர்.

எல்லாவற்றிற்கும் மேலாக விடுதலைப் புலிகள் பற்றிய பயம்தான் கடுமையான பாதுகாப்பு ஒழுங்குகளுக்கான காரணமாகவும் ஈ பி ஆர். எல் எவ் முகாமில் பந்தோபஸ்து மிகக் கடினம். உண்மையில் விடுதலைப் புலிகளின் ஆவி ஒரிஸ்ஸாவிலும் போரா அதிகாரிகளும் இவ் விஷயம் தொடர்பாக ஆருடம் கூற விரும்பவில்லை. "நாட்டில் நிலமை சீரடையும் வரை நாம் இங்கு தான் வாழ வேண்டும்" என்கிறார் பெனடிக்ற் என்ற பெயருடை ஈ என் டி. எல். எவ் மத்திய குழு உறுப்பினர்.

(தொடரும்)

நன்றி: சண்டே

---

# ஆணையாளரின் வேண்டுகோள்

(நெடுந்தீவு)

யாழ்ப்பாணத்திற்கு மிக விரைவில் வழங்கப்படவுள்ள ஐந்நூறு தொலைபேசி இணைப்புக்களில் ஒன்றினை நெடுந்தீவுக்கு வழங்கும்படி நெடுந்தீவு உதவி ஆணையாளர் கேட்டுள்ளார்.

1983 ஆம் வருடத்திற்கு முன்னர் நெடுந்தீவில் இருந்த தொலைபேசி இணைப்பு இராணுவத்தினரால் நீக்கப்பட்டிருந்தது. நெடுந்தீவின் தனித்தன்மையையும், நகரத்துடனான தொடர்புக்கு அதன் தொலைவையும் கவனத்திற் கொண்டு தொலைபேசித் தொடர்பின் அவசியத்தை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனத்திற்கொள்ள வேண்டுமெனக் கேட்கப்பட்டுள்ளது.

---

# புகையிரதப் பகுதியின் கவனத்திற்கு !

ஆசிரியர்,
ஈழநாதம்.

ஐயா,

கொழும்பு - யாழ் ரயில் சேவை இபபொழுது சுமுகமாக நடைபெறுவது ஓர் மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். புத்தாண்டு காலமாகிய இக் காலகட்டத்தில், மத்தியான வேளையில் சாவகச்சேரியை வந்தடைகிறது சாவகச்சேரி புகையிரத நிலையத்தில் தரித்து நிற்பதற்கு முன்பு கச்சாய் வீதிக் கடவைக்கருகில் தினமும் பத்து அல்லது பதினைந்து நிமிடங்கள் தரித்து நிற்கின்றது.

## மக்கள் மடல்

அதுமட்டுமன்றி, அந்த ரயிலின் இயந்திரப் பகுதியிலிருந்து இறங்கும் ஒரு நபர் அருகில் இருக்கும் குறிப்பிட்ட ஒரு வீட்டுககுள் தினமும் சென்று சில அன்பளிப்புப் பொருட்களைக் கொடுத்து விட்டுப் பதிலாக நீராகாரம் அருந்தி. திரும்பவும ரயிலில் ஏறிச் சென்று விடுகிறார்.

அவர் இவ்வாறு நடந்து கொள்வதில் எமக்கு எதுவித ஆட்சேபனையும் இல்லை. ஆனால் ரயிலில் கொழும்பிலிருந்து வரும் பயணிகள் அவருக்காக இவ்வளவு நேரம் தாமதித்துச் செல்லவேண்டிய அவசியம் இல்லை. அந்நபர் ரயிலில திரும்ப வந்து ஏறும் வரை பயணிகள் பயணக் களைப்பால் மன எரிச்சலடைவதை எம்மால் கவனிக்கக் கூடியதாக உள்ளது.

புகையிரதப் பகுதியினர் கூடிய விரைவில் ஏதாவது நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமெனப் புகையிரதப் பகுதியினரை வேண்டிக் கொள்கின்றேன்.

இவர் ஒருவருக்காக, நூற்றுக்கணக்கான பயணிகள் ஏன் கஷ்டப்பட வேண்டும்.

இங்ஙனம்

எம்- ராமநாதன்

கச்சாய் வீதி,
சாவகச்சேரி.

---

# பெண்கள் சகல துறைகளிலும் ஆண்களுக்கு நிகராக முன்னேற வேண்டும்

(கிளிநொச்சி)

பெண் அடிமை முறை, சீதன முறை ஆகியன முற்றாக ஒழிக்கப்பட்ட ஒரு புதுமைச் சமுதாயம் அமைய வேண்டுமானால் இங்கு வாழுகின்ற பெண்கள் அனைவரும் ஆண்களுக்குச் சமனாக சகல துறைகளிலும் முன்னேற வேண்டும்.

கனகபுரம் மாதர் கிராம அபிவிருத்திச் சங்க புனரமைப்புக் கூட்டத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். வேலுப்பிள்ளை மேற்கண்டவாறு கூறினார்.

திருநகர், கனகபுரம் கிராம சேவையாளர் திரு.எஸ்.துரைசிங்கம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் உதவி அரசாங்க அதிபர் திரு.வேலுப்பிள்ளை தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

ஒரு கிராம அபிவிருத்திச் சங்கத்துக்குள்ள சகல உரிமைகளும் மாதர் சங்கத்திற்கும் உண்டு. ஆகவே மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினரும் தமது கிராமத்தின் வளர்ச்சிக்காகப் பாடுபட வேண்டும்.

ஒருதாய் தனது பிள்ளையை எவ்வாறு பெற்றுப் பேணிப் பாதுகாதது கல்வியூட்டி வளர்த்து வருகிறாளோ, அவ்வாறு இச்சங்கத்தையு வளர்த்து வரவேண்டும்.

இச்சங்கத்தின் மூலம் சிறுவர் கல்வி,வளர்ந்தோர் கல்வி, தொழிற் பயிற்சி,சுயதொழில் வேலைவாய்ப்பு ஆகியவற்றை ஏற்படுத்திக் கொடுக்க முடியும். இதுதவிரப் பெண்களை கோழி வளர்ப்பு, கால்நடை வளர்ப்பு, தையல் வேலை ஆகியவற்றுக்கு ஊக்குவிக்க வேண்டும்.

அரசு வழங்கும் சுயதொழில் வேலைவாய்ப்புக்கான பணத்தைப் பெற்று, அப்பணத்தைக் கொண்டு இத்தொழில்களில் பெண்களை ஈடுபடுத்த முடியும்.

ஒருபெண் குடும்பத்தலைவியாக மட்டுமல்லாது, கிராமத்தினதும், நாட்டினதும் தலைவியாக வந்து பெண் அடிமைத்தனத்தையும், சீதன முறையையும் ஒழித்து சமத்துவமான உலகை உருவாக்க வேண்டும் என்றார்.

---

# குருகுலத்தில் கருத்தரங்கும் வைத்திய பரிசோதனையும்

(கிளிநொச்சி)

உலக சுகாதாரத் தினத்தையொட்டி, கிளிநொச்சி குருகுல அனதைச் சிறுவர் இல்லத்தில் ஒரு நாள் கருத்தரங்கும, வைத்திய பரிசோதனையும் நடாத்தப்பட்டது

கிளிநொச்சி மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி திரு. எம். யோகவினாயகம தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில சுகாதாரப் பகுதி ஊழியர்கள் பலர் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினர்.

200 க்கு மேற்பட்டவர்கள் சுகாதாரக் கருத்தரங்கில் கலந்து கொண்டனர். இக் கருத்தரங்கில் கலந்து கொண்டவர்களுக்குச் சுகாதாரப் பகுதியினர் வைத்திய பரிசோதனையை மேற்கொண்டனர்

மக்கள் மத்தியில் சூழல், சுகாதாரப் பிரச்சினை பற்றிய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துமுகமாக இக்கருத்தரங்கு நடாத்தப்பட்டது.

சுகாதாரக் கல்வி உத்தியோகத்தர் திரு. எஸ் இராசேந்திரம் இக்கருத்தரங்கிற்கான ஏற்பாடுகளைச் செய்ததுடன் கருத்தரங்கில் "எங்களுடைய உலகம், எங்களுடைய சுகாதாரம், சர்வதேச ரீதியாகச் சிந்தியுங்கள், இடத்திற்கு ஏற்ப செயற்படுங்கள்" என்ற சுலோகத்திற்கு இணங்க உரையாற்றினார்.

---

# புத்தாண்டை ஒட்டி சைக்கிள் ஓட்டப் போட்டி

(விசேட நிருபர்)

நேற்று (15-4-90) காலை யாழ். உதவி அரசாங்க அதிபர் பிரிவால் தமிழ் - சிங்களப் புத்தாண்டை ஒட்டி நடத்தப்பட்ட இருபாலருக்குமான சைக்கிள் ஓட்டப் போட்டிகள முடிவுகள் பின்வருமாறு:

ஆண்களுக்கான 25-மைல் சைக்கிள் ஓட்டம்: முதலாவது அ. துரைமணி,இரண்டாவது, சி. வை. கைலைநாதன்,மூன்றாவது வை. மகாலிங்கம்,

பெண்களுக்கான 10-மைல் சைக்கிள் ஓட்டம் முதலாவது செல்வி கி. றெசென்ஸியா, இரண்டாவது செல்வி கி. அ. அன்ரனிக்கா, மூன்றாவது செல்வி லதாமேரி

ஆண்களுக்கான சைக்கிள் ஓட்டத்தை யாழ். மாநகர சபை ஆணையாளர் திரு பால சிங்கமும, பெண்களுக்கான சைக்கிள் ஓட்டத்தை யாழ். உதவி அரசாங்க அதிபர் திரு. கே. சபாபதிப்பிள்ளையும் தொடக்கி வைத்தனர். (21)

---

# இந்து சமய நூல் நிலையம்

(களுவாஞ்சிக்குடி)

கோட்டைக்கல்லாறுதெய்வ நெறிக் கழகத்தினர் கிராமத்தில் இந்து சமய நூல் நிலையம் ஒன்றைத் திறந்து வைக்கவுள்ளனர். இந்த திறப்பு விழாவில் பிரதம விருந்தினராக இந்து கலாச்சார அமைச்சின உதவிப் பணிப்பாளர் திரு. வீ மன்மதன கலந்து கொள்ள இருக்கின்றனர். து

ஈழநாதம்

### நிர்வாக சேவையில் ஐந்து தமிழர்கள்

(பருத்தித்துறை)

ஐந்து தமிழர்கள் ஸ்ரீலங்கா நிர்வாக சேவையில் சேர்க்கப்பட்டுள்ளனர். மூவர் போட்டிப் பரீட்சை மூலமும், இருவர் சேவை அடிப்படை மூலமும் சேர்க்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (25)

## சாவகச்சேரியில் மாபெரும் விளையாட்டுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

புதுவருட தினத்தையொட்டியும் அன்னை பூபதியின் நினைவாகவும் தென்மராட்சி பகுதி நேற்று முன்தினம் விழாக்கோலம் பூண்டது. இளைஞர்கள், பாடசாலை மாணவர்கள் என பலதரப்பினருக்கும் பல விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டது.

இவ்விளையாட்டுப் போட்டிகளை தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியும் விடுதலைப் புலிகளின் மாணவர் அமைப்பும் சேர்ந்து ஒழுங்கு செய்திருந்தது குறிப்பிடத்தக்கதாகும். இப்போட்டிகளை விடுதலைப் புலிகளின் தென்மராட்சிப் பொறுப்பாளர் தினேஸ் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி இணைப்பாளர் பாப்பாவும் முன்னின்று நடத்தி வைத்தனர்.

அன்றையதினம் மாலை மிருசுவில் சந்தியிலிருந்து சாவகச்சேரி பொதுமைதானம் வரை மாபெரும் எழுச்சிப்பேரணி ஒன்று நடைபெற்றது. இப்பேரணியில் அலங்கரிக்கப்பட்ட வாகனங்கள் பலவும் ஊர்திகளாகக் கொண்டு செல்லப்பட்டது. இவ்வூர்வல முடிவில் மாபெரும் பொதுக் கூட்டம் ஒன்றும் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் யாழ். மாவட்ட அரசியல் இணைப்பாளர் டொமினிக் உட்பட தினேஸ், பாப்பா ஆகியோர் பங்குபற்றி உரையாற்றினர்.

கூட்டமுடிவில் போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கு பரிசில் வழங்கல் நிகழ்ச்சி யும் நடைபெற்றது. (மேலோ)

### மென்பந்து கிரிக்கெட் போட்டி

ஈச்சமோட்டை யங்ஸ்ராஸ் விளையாட்டுக் கழக ஆதரவில் மென்பந்துச் சுற்றுப் போட்டி நடைபெறவுள்ளது. இப் போட்டி 12 ஓவர்களைக் கொண்டது. ஓர் அணியில் 7 பேர் இடம் பெறுவர்.

இப் போட்டிகள் யாவும் அரியாலை சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

### இன்ஸ்பெக்டர்கள் பதவி உயர்வு

யாழ்ப்பாணப் பொலிஸ் அதிபர் பிரிவைச் சேர்ந்த நாலு பிரதம இன்ஸ்பெக்டர்கள் கடந்த வியாழக்கிழமை முதல் தற்காலிக உதவிப் பொலிஸ் அதிபர்களாகப் பதவி உயர்வு பெற்றுள்ளனர். பதவி உயர்வுபெற்ற பொலிஸ் அதிபர்களது விபரங்கள் வருமாறு:

யாழ்ப்பாணம் தலைமையகத்தைச் சேர்ந்த திரு. கோபாலகிருஷ்ணன், திரு. கதிர்காமநாதன், கிளிநொச்சிப் பொலிஸ் பிரிவைச்சேர்ந்த டி. ஜெயக்குமார், காங்கேசன்துறை பொலிஸ் பிரிவைச் சேர்ந்த திரு ஸ்ரீநரன் ஆகியோர்கள் குறிப்பிடத்தக்கவர்கள்.

# மக்களுக்கு ஏற்பட்ட பாதிப்பே போராட்டத்தைச் செழுமைப்படுத்தியது

## - திருமதி அன்ரன் பாலசிங்கம்

(கரவெட்டி)

இலங்கைப்படைகளாலும், இந்திய ஆக்கிரமிப்பு இராணுவத்தாலும், தமிழ்த்துரோகக் கும்பல்களாலும் தமிழீழத்தில் வாழுகின்ற தமிழ், முஸ்லீம் மக்கள் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்தப் பாதிப்பின் விளைவாகவே பலர் தம்மை போராட்டத்தில் இணைத்துக் கொண்டனர். இதனால் இந்த ஒப்பற்ற உன்னதமான போராட்டம் செழுமையடைந்துள்ளது.

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தின் பாரியார் மேஜர் சோதியாவின் 90ஆம் நாள் நினைவஞ்சலிக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினார்.

நெல்லியடி பஸ் நிலையத்தின் முன்பாக நடைபெற்ற இவ்வைபவத்திற்கு திருமதி. பேரி அன்னம்மா தலைமை வகித்தார். மேஜர் சோதியாவின் உருவப்படத்தினை வீரமரணமடைந்த லெப்டினன் நிந்திலாவின் தாயார் திருமதி நல்லையா திரை நீக்கம் செய்து வைத்தார். உருவப் படத்திற்கு வீரமரணமடைந்த கரும்புலி மில்லரின் தாயார் திருமதி வல்லிபுரம் மலர் மாலை அணிந்து அஞ்சலி செலுத்தினார். திருமதி அன்ரன் பாலசிங்கம் தொடர்ந்து பேசுகையில்;

''மேஜர் சோதியாவுடன் ஆறு ஆண்டுகளுக்கு முன்னர் ஒன்றாக இருக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. அந்தக் காலகட்டத்தில் அவரது ஆற்றல்கள் திறமைகள், போராட்ட உணர்வுகள் என்பன என்னை வெகுவாகக் கவர்ந்தது. அந்த நற்பண்புகளே பிற்காலத்தில் அவரை ஒரு திறமையான பெண் போராளியாகவும், பெண் போராளிகளின் படைப் பிரிவுத் தளபதியாகவும் ஆக்கியுள்ளது. ஆனால் அந்த வீர உள்ளம் இன்று எம்மத்தியில் இல்லை. ஆயினும் அவரது உருவப்படம் அவர் பிறந்து வளர்ந்து ஓடி உலாவிய இந்தக் கிராமத்தில் வைக்கப்பட்டுள்ளது, அந்த உருவப் படத்தைக் காணுகின்ற நேரமெல்லாம் கவலை கொள்ளாதீர்கள். உங்களது மனதில் போராட்ட சிந்தனையை உருவாக்கிக் கொள்ளுங்கள். அந்தச் சிந்தனை வெளிப்பாட்டினால் அவரது இலட்சியங்கள் வென்றெடுக்கப்பட வேண்டும்'' என்றார்.

இவ்வைபவத்தில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தலைமைச் செயற்குழு உறுப்பினர் திரு செங்கதிர் பேசுகையில், சமுதாயம் அடக்குமுறைக்குள்ளான பெண்கள் இனவாத அரசின் அட்டூழியங்களினால் அந்த அடக்கு முறைகளை உடைத்தெறிந்து போராட்டத்தில் தம்மையும் இணைத்துக் கொண்டுள்ளனர். ஆனால் இன்று இந்தப் பெண்ணினமானது ஆணுக்குச் சரிநிகராய் வளர்ச்சி பெற்று போராடுவதையிட்டு மனமகிழ்ச்சியடைகின்றோம். இவர்களின் போராட்டம் இந்திய அரசிற்கு தகுந்த பாடமாக அமைந்ததையிட்டு மனமகிழ்ச்சியடைகிறேன். இந்த இலட்சியத்திற்காக வீரமரணத்தை தழுவிக்கொண்ட சோதியாவின் ஆவலை நிறைவேற்ற அனைவரும் முன்வரவேண்டுமென வேண்டுகோள் விடுக்கிறேன், என்றார்.

இவ்வைபவத்தில் யாழ். மாவட்ட மகளிர் முன்னணி பொறுப்பாளர் செல்வி. மாலினி பேசுகையில், எமது போராட்டத்தை செழுமைப் படுத்தும் ஒரு வரலாற்றுக் காலகட்டத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இந்த வேளையில் இயற்கை மரணத்தைத்தழுவிக்கொண்ட மேஜர் சோதியாவின் இழப்பு மிகுந்த வேதனை தருகின்றது.

மேஜர் சோதியா சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலிலும், இந்திய ஆக்கிரமிப்பாளர்களுடனான மோதலிலும் முக்கிய பங்கெடுத்துக் கொண்டவள். இதேநேரம் எமது மகளிர் படைப் பிரிவின் முதலாவது பொறுப்பாளராகவும் திகழ்ந்தவர். இவரின் இலட்சியத்தை முன்னெடுக்க நாம் தயாராக இருக்கின்றோம், என்றார்.

இவ்வைபவத்தில் வடமராட்சிப் பொறுப்பாளர் திரு. சூசை, வடமராட்சி மக்கள் முன்னணி இணைப்பாளர் திரு. குணம், திரு ஸ்ரனிஸ்லஸ் ஆகியோரும் உரை நிகழ்த்தினர். மகளிர் முன்னணியைச் சேர்ந்த செல்வி. கிருபா நன்றி நவின்றார் (18)

### ஒஸ்மானியா . . .

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

தாலோசித்து விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி மீண்டும் யாழ். ஒஸ்மானியாக் கல்லூரியில் ஆரம்பப் பிரிவை இயங்க வைத்துள்ளனர்.

இதையொட்டி கல்லூரி நிர்வாக சபையினர் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினருக்கு நன்றி தெரிவித்து ஒரு கூட்டம் ஒழுங்கு செய்திருந்தனர்.

இக் கூட்டத்தில் வலிகாமம் அரசியல் இணைப்பாளர் ஆஞ்சனேயர் கலந்துகொண்டு உரையாற்றுகையில் ஒஸ்மானியாக் கல்லூரி ஆரம்பப்பிரிவு தொடர்ந்தும் இயங்கும் என அறிவித்தார். இதற்கு அக் கூட்டத்தில் பெருவரவேற்பும் கரகோசமும் எழுந்தது. கல்லூரி நிர்வாகசபைச் செயலாளர் கே.எம்.எஸ். கமீத் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்திற்கு பெருந்தொகையான பெற்றோர்களும் ஆசிரி

### ராஜீவ்காந்தி . . .

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

படுத்துவதாய் அமைந்துள்ளது.. தமிழீழ விடுதலை வெகு தூரத்தில் இல்லை என்பதைப் பறை சாற்றுகிறது.

இன்றைய நாள் வரலாற்று ஏட்டில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டும். மேலும் கடந்த காலத்தில் நாம் இந்திய வல்லரசை துரத்தியடிக்கின்றோம். ஆயின் அதற்கு எமது மக்களின் உறுதியும் அவர்களுடைய பங்களிப்புமே முழுக் காரணம் என்று குறிப்பிட்டார்.

தொடர்ந்து தென்மராட்சி அரசியல் இணைப்பாளர் பாப்பா உரையாற்றுகையில் எண்பத்தேழாம் ஆண்டு அக்டோபர் மாதம் எந்த இந்திய இராணுவம் தனது விமானப் படையின் உதவியுடன் 95க்கு மேற்பட்ட சாவகச்சேரி மக்களை கொன்று குவித்ததோ அதே சாவகச்சேரியில் இன்று

### காணித்தகராறால்

(1 ஆம் பக்கந் தொடர்ச்சி)

65) என்பவர் நேற்று முன்தினம் யாழ் வைத்திய சாலையில் மரணமானார்.

சின்னக்கடையைச் சேர்ந்த இவர் தோளில் இரும்புக் கம்பியினால் தாக்கப்பட்டுள்ளதாக மரண விசாரணை அதிகாரிகள் தெரிவித்தனர். (லோ)

மகேந்திராசா . . .

### க. பொ. த . . .

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மேற்படி துறைசார்ந்த பாடம் ஏதாவது ஒன்றில் அதிவிசேட சித்தியடைந்தவர்களுக்கு ஆசிரிய நியமனம் வழங்கும்படி கல்வி, உயர் கல்வி அமைச்சர் லலித் அத்துலத்முதலி கல்வி அமைச்சு அதிகாரிகளைப் பணித்துள்ளார்.

இந்தஅடிப்படையில் ஆசிரிய நியமனம் பெறுபவர்கள் முதல் நியமனத் திகதியிலிருந்து மூன்று வருடங்களுக்கிடையில் கணித பாடம் பரீட்சைக்குத் தோற்றி அப்பாடத்தில் சித்தியடைய வேண்டுமாம்.

## பாடசாலைகள், படிப்பகங்கள் புதிய தலைமுறைக்குத் தேவை

### -கைலாஸ்

தரப்படுத்தலுக் கெதிராக ஆரம்பிக்கப்பட்ட எமது போராட்டம் புதிய சகாப்தத்தைப் படைத்துள்ளபோதிலும் கலவிக் கொள்கைக்கு ஏற்ப இப்படியானபாடசாலைகளையும் படிப்பகங்களையும் ஆரம்பித்து புதிய தலைமுறைகளை உருவாக்குவோமென உறுதி கூறினார் கைலாஸ் அவர்கள்.

கடந்தவெள்ளியன்றுமாலை விஸ்வமடுவில் ''சிறீல சிறி'' எனும் பாடசாலையை வீரமரணமடைந்த வீரவேங்கை ''இளங்கோ'' அவர்களின் ஓராண்டு நினைவாகத் திறந்து வைத்துப் பேசிய அரசியல் மாவட்ட பொறுப்பாளர் ''கைலாஸ்'' அவர்கள்மேலும் கல்வி வட்டத்தில் பின்தங்கியதாகக் கருதப்படும் வன்னிப் பிரதேசம் வளம்பெற இந்த மண்ணின் மைந்தர்கள், மண்ணிற்காக மரணித்த வீரவேங்கைகளின் கனவை நனவாக்கி கல்வி வளர்ச்சியால் தமிழ் ஈழம் அரசியல் பொருளாதார சுபீட்சம்பெற பாடுபடுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன் என்றார்.

இவ்விழாவிற்கு புதுக்குடியிருப்பு பிரதேச அரசியல்

பாகிஸ்தானை

## தாக்குபவர்களுக்கு தகுந்த பதிலடி கிடைக்கும்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் எந்தவித ஆயுத அச்சுறுத்லையும்எதிர்கொள்ளத் தயாராக இருப்பதோடு, ஆயுத அச்சுறுத்தலை ஏற்படுத்துபவர்கள் பாரதூரமான விளைவுகளை எதிர்நோக்க வேண்டியும்வரும் என பாகிஸ்தானின் தேசிய பாதுகாப்பு அமைச்சர் எச்சரித்துள்ளார்.

இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்குமிடையில் தற்போது ஏற்பட்டிருக்கும் நெருக்கடியினைத் தொடர்ந்து கூட்டப்பட்ட பாகிஸ்தான் செனட்டர்கள் கூட்டத்திலேயே இவ்வாறு எச்சரிக்கப்பட்டது.

இக் கூட்டத்தில் இந்தியாவுடனான சகல விடயங்களும் காஷ்மீர் தொடர்பான பிரச்சினைகளும் விரிவாக ஆராயப்பட்டன.

பாலச்சந்தர் மரணம்

## இந்த நூற்றாண்டின் பெரும் இழப்பு

வசித்தார். மேஜர் சோதியா வின் உருவப்படத்தினை வீர மரணமடைந்த லெப்டினன் ந்திலாவின் தாயார் திருமதி

### க. பொ. த . . .

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மேற்படி துறைசார்ந்த பாடம் ஏதாவது ஒன்றில் அதிவிசேட சித்தியடைந்தவர்களுக்கு ஆசிரிய நியமனம் வழங்கும்படி கல்வி, உயர் கல்வி அமைச்சர் லலித் அத்துலத்முதலி கல்வி அமைச்சு அதிகாரிகளைப் பணித்துள்ளார்.

இந்தஅடிப்படையில் ஆசிரிய நியமனம் பெறுபவர்கள் முதல் நியமனத் திகதியிலிருந்து மூன்று வருடங்களுக்கிடையில் கணித பாடம் பரீட்சைக்குத் தோற்றி அப்பாடத்தில் சித்தியடைய வேண்டுமாம்.

### மட்டக்களப்பில் . - .

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் ஏப்பிரல் மாத இறுதியில் இருந்து 4000/- ரூபா சுயதொழில் உதவியும், 2000/- ரூபா மீளக் குடியமர்தல் உதவியும் வழங்கப்படவுள்ளன.

### ஆனந் புரம் . . .

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

நிறுவனமொன்றின் பிரதிநிதிகள், இக்கிராம அபிவிருத்திக்கு, மக்கள் நலன் காக்கும் பிரிவினர் தயாரித்துக் கொடுத்த ரூபா 4,85,000/- பெறுமதியான செலவினங்களை அங்கீகரித்துள்ளார்கள். இப்பணம் கிடைக்கப் பெற்றதும் இங்கு ஒரு பாலர் பாடசாலை, 30 மலசலகூடங்கள். 16 விதவைகளுக்கான தனிப்பட்ட தொழில் முயற்சி ஊக்குவிப்பு என்பன செய்து கொடுக்கப்படும்.

இதைவிட நான்கு இலட்சம் ரூபா செலவில் ஒரு பாற்பண்ணையை அமைத்து, குடும்பத் தலைவர்களை இழந்த 15 விதவைகளுக்கு தொழில் வாய்ப்பைப் பெற்றுக் கொடுக்கும் நோக்குடன் அவுஸ்திரேலிய நாட்டு நிதி நிறுவனமொன்றின் உதவி எதிர்பார்க்கப்பட்டு இருப்பதாகவும், அங்கீகரிக்கப்பட்ட இத்திட்டத்திற்கு நிதி கிடைத்ததும் இத்திட்டம் அமுல் செய்யப்படும் என்றும் கோப்பாய் மக்கள் நலன் காக்கும் பிரிவு செயலாளர் ஈழநாதத்திற்குத் தெரிவித்தார். (19)

### உயிர்த்த . . .

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

முன்னிட்டு. யாழ்நகர்த் தியேட்டர் எல்லாவற்றிலும் இரவு இரண்டாம் காட்சி நடைபெற்றது. மக்களின் நடமாட்டம் நள்ளிரவு வரை வீதியெங்கும் காணப்பட்டது.

மீண்டும் யாழ். ஒஸ்மானியாக் கல்லூரியில் ஆரம்பப் பிரிவை இயங்க வைத்துள்ளனர்.

இதையொட்டி கல்லூரி நிர்வாக சபையினர் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினருக்கு நன்றி தெரிவித்து ஒரு கூட்டம் ஒழுங்கு செய்திருந்தனர்.

இக் கூட்டத்தில் வலிகாமம் அரசியல் இணைப்பாளர் ஆஞ்சநேயர் கலந்துகொண்டு உரையாற்றுகையில் ஒஸ்மானியாக் கல்லூரி ஆரம்பப்பிரிவு தொடர்ந்தும் இயங்கும் என அறிவித்தார். இதற்கு அக் கூட்டத்தில் பெருவரவேற்பும் கரகோசமும் எழுந்தது. கல்லூரி நிர்வாகசபைச் செயலாளர் கே.எம்.எஸ். கமீத் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்திற்கு பெருந்தொகையான பெற்றோர்களும் ஆசிரியர்களும் சமுகமளித்திருந்தனர்.

இறுதியாக எஸ். எம். சுல்த்தான் அவர்கள் நன்றி தெரிவித்து பேசுகையில் யாழ் முஸ்லீம் மக்கள் தனித்துவமானவர்கள். அவர்கள் என்றும் தமிழ் மக்களுடன் ஒன்றிணைந்தேவாழ்வர். இதனை எவராலும் மறுக்க முடியாது. இவ்வருடம் பெப்பிரவரி மாதம் 4ஆம் திகதி எமக்கு தற்காலிக அனுமதியும் பின்பு நிரந்தர அனுமதியும் பெற்றுத் தந்த விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியினருக்கு முஸ்லீம் சமுதாயம் சார்பில் நாம் என்றென்றும் கடமைப்பட்டவர்களாக உள்ளோம் என்று கூறினார். (லோ)

### பருத்தித்துறை . . .

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸ் நிலையம் மூடப்பட்டது.

தற்போது பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலய முன்னால் உள்ள தனியார்கட்டிடமொன்றில் வசதிகளற்ற நிலையில் இயங்கி வரும் தபால் நிலையத்தை அதன் சொந்தக் கட்டிடத்திற்கு மாற்றும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பருத்தித்துறை பொலிஸ் நிலையம் மீண்டும் திறக்கப் பட்டாலும் தபால் நிலையக் கட்டிடத்தில் திறக்கப்படாது வேறொரு கட்டிடத்திலேயே திறக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (25)

### 500 பேரில் . . .

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பில் இருந்த 56 மக்கள்தொண்டர்படையினரில் லீவில்சென்ற இரண்டுபேர் இதுவரை திரும்பவும் கடமைக்கு சமுகம் தரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. மக்கள் தொண்டர் படையைச் சேர்ந்தவர்களுக்கு அரசாங்கத்தால் சம்பளம் வழங்கப்பட்டு வருகின்றது.

வெகு தூரத்தில் இல்லை என்பதைப் பறை சாற்றுகிறது.

இன்றைய நாள் வரலாற்று ஏட்டில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப் படவேண்டும். மேலும் கடந்த காலத்தில் நாம் இந்திய வல்லரசை துரத்தியடிக்கின்றோம். ஆயின் அதற்கு எமது மக்களின் உறுதியும் அவர்களுடைய பங்களிப்புமே முழுக் காரணம் என்று குறிப்பிட்டார்.

தொடர்ந்து தென்மராட்சி அரசியல் இணைப்பாளர் பாப்பா உரையாற்றுகையில் எண்பத்தேழாம் ஆண்டு அக்டோபர் மாதம் எந்த இந்திய இராணுவம் தனது விமானப் படையின் உதவியுடன் 95க்கு மேற்பட்ட சாவகச்சேரி மக்களை கொன்று குவித்ததோ அதே சாவகச்சேரியில் இன்று இந்த மாபெரும் எழுச்சி ஊர்வலம் உணர்வு பூர்வமாக நடத்தப்பட்டிருக்கிறது. ஆகவே இந்தியப் படை எமது மக்களின் உணர்வுகளை கொன்றொழிக்க முடியாது என்பதை இன்று நடந்த எழுச்சி ஊர்வலத்தின் மூலம் எமது மக்கள் செயலில் காட்டியுள்ளனர் என்றார்.

மேலும் இக் கூட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் மாணவர் அமைப்பு பொறுப்பாளர் செல்வி பாரதி உட்பட பலர் உரையாற்றினர் இக் கூட்டம் தென்மராட்சி மாணவர் அமைப்பு பொறுப்பாளர் திரு. ரஞ்சன் தலைமையில் நடைபெற்றது. (லோ)

### ஆய்வு . . .

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

களைப் பராமரிப்பதற்கு அரசாங்கம் பணத்தைச் செலவு செய்ய முன்வர வேண்டும் என்றும், யப்பான் நன்கொடையாக வழங்கிய உபகரணங்களை அழிய விடக்கூடாது என்றார்.

### பிரிவினையைத் . . .

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த காலத்தில் தமிழகத்தில் பிரிவினைவாத சக்திகள் தலைதூக்காமல் இருந்ததென்றும், தற்பொழுது தி மு க. ஆட்சி வந்ததும் பிரிவினை வாதம் தலைதூக்குவதாகவும் இதற்கு முதல்வர் கருணாநிதி தூண்டுகோலாக இருப்பதாகவும் வாழப்பாடி குற்றம் சாட்டினார்.

மேலும் தமிழ்நாட்டு மீனவர்களை தமிழ் போராளிகள் துன்புறுத்துவதாகவும், அதனை முதல்வர் கண்டிக்காது மீனவர்களைக் கட்டுப் பண்ணுகிறார் எனவும் தெரிவித்தார்.

மேலும் கருணாநிதி இலங்கையில் இருந்து திரும்பிய அமைதிப்படையை வரவேற்கச் செல்லாததால் பிரதம மந்திரியைச் சந்திக்கத் தயங்குவதாகவும் வாழப்பாடி ராமமூர்த்தி தெரிவித்தார்.

மாலினி பேசுகையில், எமது போராட்டத்தை செழுமைப் படுத்தும் ஒரு வரலாற்றுக் காலகட்டத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இந்த வேளையில் இயற்கை மரணத்தைத்தழுவிக்கொண்ட மேஜர் சோதியாவின் இழப்பு மிகுந்த வேதனை தருகின்றது.

### காணித்தகராறால்

(1 ஆம் பக்கந் தொடர்ச்சி)

65) என்பவர் நேற்று முன் தினம் யாழ் வைத்திய சாலையில் மரணமானார்.

சின்னக்கடையைச் சேர்ந்த இவர் தோளில் இரும்புக் கம்பியினால் தாக்கப்பட்டுள்ளதாக மரண விசாரணை அதிகாரிகள் தெரிவித்தனர். (லோ)

### மகேந்திரராசா . . .

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

யும் சந்தித்துப்பேசவிருக்கும் திரு. மகேந்திரராசா மக்கள் முன்னணியின் கிளைகள் அமைப்பு பற்றியும் ஆலோசனை நடத்துவார். திரு. மகேந்திரராசாவுடன் கவிஞர் காசிஆனந்தனும் திருமலை வருகிறார்.

## தாக்குபவர்களுக்கு தகுந்த பதிலடி கிடைக்கும்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் எந்தவித ஆயுத அச்சுறுத்லையும்எதிர் கொள்ளத் தயாராக இருப்பதோடு, ஆயுத அச்சுறுத்தலை ஏற்படுத்துபவர்கள் பாரதூரமான விளைவுகளை எதிர் நோக்க வேண்டியும்வரும் என பாகிஸ்தானின் தேசிய பாதுகாப்பு அமைச்சர் எச்சரித்துள்ளார்.

இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்குமிடையில் தற்போது ஏற்பட்டிருக்கும் நெருக்கடியினைத் தொடர்ந்து கூட்டப்பட்ட பாகிஸ்தான் செனட்டர்கள் கூட்டத்திலேயே இவ்வாறு எச்சரிக்கப்பட்டது.

இக் கூட்டத்தில் இந்தியாவுடனான சகல விடயங்களும் காஷ்மீர் தொடர்பான பிரச்சினைகளும் விரிவாக ஆராயப்பட்டன.

### பாலச்சந்தர் மரணம்

## இந்த நூற்றாண்டின் பெரும் இழப்பு

(சென்னை)

எஸ். பாலச்சந்தரின் பெரிய விசிறியாக நான் இருந்திருக்கிறேன். அந்த நாள், கைதி ஆகிய அவரது படங்களை நான் ரசித்துப் பார்த்திருக்கிறேன். அவர் மற்ற இயக்குநர்களைவிடவித்தியாசமானவர். எதையும் நேரே சொல்லும் பண்புடையவர், உண்மையான கலைஞர். இந்த நூற்றாண்டிலேயே மிகச் சிறந்த கலைஞர். பாலச்சந்தர் மரணம் இந்த நூற்றாண்டின் பெரும் இழப்பாகும். இவ்வாறு பத்மபூஷண் டாக்டர் கே. பாலச்சந்தர், எஸ். பாலச்சந்தர் மரணம் தொடர்பான ரங்கல் செய்தியில் தெரிவிக்கிறார்.

அவர்கள்.

கடந்தவெள்ளியன்றுமாலை விஸ்வமடுவில் ''சிறீல சிறி'' எனும் பாடசாலையை வீரமரணமடைந்த வீரவேங்கை ''இளங்கோ'' அவர்களின் ஓராண்டு நினைவாகத் திறந்து வைத்துப் பேசிய அரசியல் மாவட்ட பொறுப்பாளர் ''கைலாஸ்'' அவர்கள்மேலும் கல்வி வட்டத்தில் பின்தங்கியதாகக் கருதப்படும் வன்னிப் பிரதேசம் வளம்பெற இந்த மண்ணின் மைந்தர்கள், மண்ணிற்காக மரணித்த வீரவேங்கைகளின் கனவை நனவாக்கி கல்வி வளர்ச்சியால் தமிழ் ஈழம் அரசியல் பொருளாதார சுபீட்சம்பெற பாடுபடுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன் என்றார்.

இவ்விழாவிற்கு புதுக்குடியிருப்பு பிரதேச அரசியல் பொறுப்பாளர் குணம் அவர்களும் மகளிர் பிரிவில் செல்வி ஜெனி அவர்களும் கலந்து கொண்டனர் (58)

### உண்ணாவிரதம்

(நீர்வேலி)

இன்று திங்கட்கிழமை நீர்வேலிக் கந்தசாமி கோவில் முன்றலில் அன்னை பூபதியின் நினைவாக உண்ணாவிரதம் நடைபெறவுள்ளது.

## வறிய மக்களின் கொடுப்பனவுகள் தாமதம்

(புங்குடுதீவு)

வறிய மக்களுக்காக வழங்கப்படும் பொதுசன உதவி மாதாந்த பணக் கொடுப்பனவு (Pama)புங்குடுதீவில் பிரதான தபாற் கந்தோரிலும், உபதபாற் கந்தோரிலும் காலதாமதமாக வழங்கப் படுகிறது.

ஒவ்வொரு மாதமும் ஆறாம் திகதியளவில் கொடுக்கப் பட்டு வந்த இப்பணக் கொடுப்பனவு அண்மைக் காலமாக பன்னிரண்டாம், பதின் மூன்றாம் திகதி வரையும் கொடுக்கப்படாமலுள்ளது.

வேலணை உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்திலிருந்து இக் கொடுப்பனவுக்கான பெயர்ப் பட்டியல் காலதாமதமாக வந்து சேர்வதே இதற்கு காரணம் என தெரியவருகிறது. இதனால் பெருந் தொகையான வறிய மக்கள் சில நாட்களுக்கு அலைந்து திரிய வேண்டியுள்ளது. (22)

### அன்னை பூபதி

## தன்னையும் இரு புதல்வரையும் தமிழினத்திற்காகவே ஈந்தார்

(நீர்வேலி)

தமிழினத்தின் விடிவுக்காக தனது இரு புதல்வர்களையும் பறிகொடுத்த அன்னை பூபதி தானும் தமிழினத்தின் வாழ்வுக்காக உண்ணாவிரதமிருந்து உலக வரலாற்றில் ஒரு சாதனையை நிலைநாட்டி மக்கள் அனைவரது உள்ளங்களிலும் ஒரு வாடாத மலராக நிலை கொண்டுள்ளார். என அச்செழுவில் நடைபெற்ற அன்னை பூபதியின் நினைவஞ்சலிக்கூட்டத்தில் உரையாற்றுகையில் வலிகாமம் அரசியற் பொறுப்பாளர் ஆஞ்சநேயர் குறிப்பிட்டார்.

அன்னையின் இப்போராட்டம் மக்கள்மத்தியில் அன்னையை ஓர் வாடாத மலராக நிலை நிறுத்தியுள்ளது. அதே போல் எமது எதிர்கால சந்ததியினரின் உள்ளங்களிலெல்லாம் இந்தத் தியாகங்கள் பதிய வேண்டும். நாம் எல்லோரும் எம்மினத்தின் விடிவுக்காகப் போராட வேண்டும். அதுவே நாம் அன்னை பூபதிக்குச் செய்யும் கடமையாகும் என்றார்.

NORTHERN TRADERS

DEALERS IN PRIMA POULTRY FEEDS & ANIMAL FOODS AND FERTILIZER

95/2, Stanley Road, Jaffna.

பிறிமா கோழித்தீன் யாழ்ப்பாணப் பகுதி ஏக விநியோகஸ்தராகிய நாங்கள் வாடிக்கையாளர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள் யாவருக்கும்

எமது புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்

எம்மிடம் பின்வரும் பொருட்களை மொத்தமாகவும், சில்லறையாகவும் மிகக் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

பிறிமா கோழித் தீன் வகைகள்
சகலவிதமான உர வகைகள்
கால் நடைகளுக்கான மருந்து வகைகள்
கோழி உணவுப் பாத்திரங்கள்
கோழிக் குஞ்சுகள் (PRIMA)
மாட்டுத்தீன் வகைகள்
பிண்ணாக்கு, தவிடு, சோளம், தரமான சிப்பி போன்றவை வியாபாரிகளுக்கு விசேட கழிவுடன் போக்குவரத்து வசதியும் இலவசமாகச் செய்து கொடுக்கப்படும்.

(R.112)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி, 31-ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16-ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.